
|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 குரோதி ஞு சித்திரை - வைகாசி மீ மே 2024 இதழ் 5



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

சித்திரை - வைகாசி 2024

மலர் 13 மே 2024 இதழ் 5

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 8 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 18 |
| ராஜ தரங்கிணி | 19 |
| வைகாசி மாத விசேஷ தினங்கள் | 21 |
| தாயுமானவர் | 22 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 26 |
| நாம ராமாயணம் | 31 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 33 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 35 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 37 |
| ஆழ்வார்கள் சரித்திரம் | 39 |
| ப்ரபோத சிந்தாமணி | 41 |
| மகாபாரத சுருக்கம் | 42 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 46 |
| மூக ஸாரம் | 47 |



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।


Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்





ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com



சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*சுகம் தரும் நல்ல எண்ணங்கள் பல திசைகளிலிருந்து எம்மை அடையட்டும். தேவர்கள் எம்மை பாலனம் செய்து எம்மை செழிப்பிக்கட்டும். தேவர்களின் கடாட்சம் எமக்குத் தோன்றுக. நாங்கள் தேவர்களின் நட்பைப் பெறுவோமாக. நாங்கள் நூறு வருடம் வாழ எங்கள் ஆயுளை நீடீப்பார்களாக.*

*நாங்கள் புராதன வேத மொழியோடு பகனையும், ருத்ரனையும், அதிதியையும், தக்ஷனையும், மருதகணத்தையும், அர்யமனையும், வருணனையும், அஸ்வினிகளையும், ஸோமனையும் அழைக்கிறோம். மங்கலச் செல்வியான ஸரஸ்வதி எம்மை ஸுகப்படுத்தட்டும்.*

*தாயான தரணியும், தந்தையான ஜோதியும், எம்மிடம் மருத்தை அனுப்பட்டும். நாங்கள் தலைவனும், ஸ்தாவர ஜங்கமப் பொருள்களின் நாயகனான இந்த்ரனை எம்மைக் காக்க அழைக்கிறோம். பூஷா தேவதை எம் ஸ்வஸ்தியை நீடிக்கும்.*

*பாலகனாக இருப்பானாக.*

*[ ரிக் வேதம் 1-89]*

*குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடி மதில்சூழ் இலங்கை*
*அன்றி நின்ற அரக்கர்கோனை அருவரைக் கீழ் அடர்த்தாய்*
*என்று நல்ல வாய்மொழியாலேத்தியிராப்பகலும்*
*நின்று நைவார் இடர்களையாய் நெடுங்களமேயவனே*

*[திருஞானசம்பந்தர்]*

*இலங்கைத் தீவின் உச்சியில் வீணைகொடியுடன் இருப்பவனும் தசகண்ட ராவணனை சாமகானம் இசைத்து மயக்குகிறேன் என்று சூளுரைத்து மலையைத் தூக்கி அசைத்தவனை உன் கட்டை விரலால் அழுத்தினவான் உன்னை நல்ல மந்திரச் சொல்லால் இரவும் பகலும் எத்தி நைந்து உருகும் அடியார்கள் இடர்கள் அனைத்தையும் களைந்து அருள்வாய் சிவ பெருமானே !*

*விருத்தனாகிப் பாலனாகி வேதம் ஓர் நான் கு உணர்ந்து*

*கருத்தனாகி கங்கையானைக் கமழ் சடைமேல் கரந்தாய்*

*அருத்தனாய ஆதிதேவன் அடி இணையே பரவும்*

*நிருத்தர் கீதர் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே [திருஞானஸம்பந்தர் தேவாரம்]*

*திரு நெடுங்களம் மேவிய இறைவனே மூத்த வேடம் தாங்கியும், இளமை வடிவம் கொண்டும், வேதங்கள் நான்கையும் நன்குணர்ந்த தலைவனாய் கங்கையை சடையில் வைத்துள்ள பெருமானே உன் அடிகளைப் பாடிப் பரவி போற்றும் அடியவர்களது இடர்களைப் போக்கி அருள்வாயாக.*


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்''
## என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ஆசிரியர் பக்கம்

***சாங்கர த்ரயம்***

*வேதாந்தத்தின் ஸாரமாயும், ஆதாரமாயும் ப்ரஸ்தான த்ரயம் என்னும் க்ரந்தங்கள் [பகவத் கீதை, தசோபனிஷத்கள், ப்ரம்மஸூத்ரங்கள்] ப்ரஸித்தமாய் விளங்குகின்றன.*

*இவைகளுக்கு பாஷ்யம் எழுதி அத்வைதத்தை தெரிய வைத்தவர் ஸ்ரீ சங்கரர். அவரது ப்ரஸித்தமான பாஷ்யங்களுக்கு இணை எதுவும் கிடையாது. ப்ரஸன்ன கம்பீரம் என்னும் வகையில் வந்தவை அவை. எல்லோராலும் படித்துத் தெரிந்து கொள்ள முடியாதவையாகவும் அவை உள்ளன. இந்தக் குறையைப் போக்க ஆசார்யாளே ப்ரகரண க்ரந்தங்களை எழுதி விளக்கியுள்ளார். அவைகளில் மூன்று முக்யமானவை.*

*மக்களுக்கு மோக்ஷம் தர மூன்று மார்க்கங்களை நமது மதம் தந்துள்ளது. பக்தி, கர்ம, ஞான மார்க்கங்கள் என்று ப்ரஸித்தியானவை. இதற்கேற்றார் போல் பாமரர்களும் உய்ய அவரது மூன்று க்ரந்தங்கள் விளங்குகின்றன. அவைகளை சாங்கர த்ரயம் என்று கூறுகிறோம்.*

*இதுபற்றி கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். **'ப்ரஸ்னோத்ர ரத்ன மாலிகா** கர்ம மார்கத்திற்கும், **'பஜ கோவிந்தம்'** பக்தி மார்கத்திற்கும்; **ஆத்ம போதம்** ஞான மார்க்கத்திற்கும் என்று நாம் எடுத்துள்ளோம். இவைகளில் ஆசார்யாள் சொன்ன விஷயங்களை சில எடுத்துக்காட்டுகளுடன் பார்ப்போம்.*

*ப்ரஸ்னோத்ர ரத்ன மாலிகா 66 ஸ்லோகங்கள் கொண்டது. ஸ்வாரஸ்யமான கேள்வி பதில்களைக் கொண்டது. மாதிரிக்குச் சில.*

***எது பத்யம், தர்மம் ? எவன் சுத்தன் ? :** எவன் மனசு சுத்தமோ அவன்.*

***எவன் பண்டிதன்? :** விவேகி*

***எது விஷம்? :** பெரியோர் வார்த்தையை அலக்ஷியம் செய்வது.*

***தாமரை இலைபோல் நிலையில்லாதவை எவை*? : இளமை, செல்வம் ஆயுள்.**

***ஸாதிக்க தகுந்தது எது*? : ஜீவர்களுக்கு ஹிதம் செய்தல்**

***எவனை தேவர்களும் கும்பிடுகிறார்கள்*? : தயை உடையவனை.**

***நரர்களுக்கு துர்லபம் எது*? : ஹரி பக்தி.**

***எது பரமார்த்திகம்* ? : அத்வைதம்**

***பர தேவதை யார்*? : ஞானாம்பிகை.**

***பகவான் யார்*? : சங்கரனும் நாராயணனுமான ஒரே மூர்த்தி.**

***இனி பக்தி மார்க்கத்திற்கு உரியதான பஜ கோவிந்தத்திலிருந்து சில மாதிரிகள் :***

*'கோவிந்தனை பஜி மனமே ! என்று ஆரம்பித்து ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் பின் இதையெடுத்தியம்பும்படி செய்து பக்தி மார்கத்தைக் கண்பிக்கிறார். பொருளை பொருளாகக் கருதாதே, உன் உழைப்பில் வந்ததைக் கொண்டு த்ருப்தி பட்டுக் கொள், இந்த ஜீவனம் நிலையானது அல்ல, பரப்ரம்மத்தில் யாரும் ஈடுபடுவதில்லை, ஸத்ஸங்கத்தை நாடு பருவங்கள் மாறி, காலம் மாறினாலும் ஆசை யாரையும் விடுவதில்லை, ஞானமில்லாதவன் வ்ரதங்களாலும் தீர்த்த யாத்ரையாலும் முக்தியை அடைவதில்லை, ஆத்மாவையே எங்கும் பார். எவ்விடத்திலும் பேத ஞானத்தை விட வேண்டும்'' அல்லனவற்றை விலக்கவும், நல்லனவற்றை சேர்க்கவும் கோவிந்தனின் புகழ் பாட வேண்டும் என்பது பஜ கோவிந்தத்தின் ஸாரம்.*

*அடுத்து ஞான மார்க்கத்திற்கு உரியதான 'ஆத்ம போதத்திலிருந்து சில மாதிரிகள் :*

*சமையலுக்கு நெருப்பு எப்படியோ, அப்படியே மோக்ஷத்திற்கு ஞானம். ஆத்மா ஸ்வயம் ப்ரகாசமானது. அறியாமையால் மறைக்கப்பட்டுள்ளது. ஸம்சாரம் கனவைப் போன்றது. ஞானம் தோன்றும் வரையில்தான் ஜகத் ஸத்யம். ஆபரணங்களில் தங்கம் எப்படி ஆதாரமோ அப்படி ப்ரம்மம் அனைத்துக்கும்*

ஆதாரம். ஆத்மா அரசனைப்போல் பார்வையாளனே. ஆத்மா நிர்மலமானது. உபாதிகள் அழியக்கூடியவை. கயிற்றில் பாம்பு போல் உலக மயக்கம். இடையறாது ப்ரம்மத்யானம் செய்ய வேண்டும். ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றே. ப்ரம்மம் ஒன்றே உண்மை. மற்றவை பொய்யானவை''

இப்படி மூன்று மார்க்கங்களுக்கும் அவரது உபதேசம் பயன்படுகிறது. இந்த மூன்று எளிமையான நூல்களை அனைவரும் படிக்க வேண்டும். அதன்படி நடக்க வேண்டும்.

வைதிகர்கள் அனைவரும் இந்த மூன்று நூல்களைக் கட்டாயம் பயில வேண்டும். வாசகர்கள் கூட ஓய்வு நேரத்தில் படித்துப் பார்க்கலாம். பயன் பெறலாம். பெரிய வேதாந்தியாக இல்லாவிட்டாலும் இந்த ''சாங்கர த்ரயம்'' வேதாந்தத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!

★★★★★★★★

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.


**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மன்னர்களும் மக்களும் செய்த மதபோஷணை



எனினும், மன்னர்களும் மக்களும் தாமாகவே நல்ல மதாபிமானமுள்ளோராயிருந்ததால் அவர்கள் மூலமே பொருளாலும் ஆள்கட்டாலும் காப்பளிப்பது எனும் அம்சம் நல்லபடியாக நிறைவேறி ஹிந்து மத போஷணை வெகு நீண்டகாலம் வரையில் நன்கு நடந்து வந்திருக்கிறது.

முக்கியமாக ஆலய வழிபாடே ஒரு மத சமூகத்தினரிடம் மதத்தைக் காத்துக் கொடுப்பதாக இருக்கிறது. சமூகத்தினரை மதத்தால் காத்துக் கொடுப்பதும் முக்கியமாக ஆலய வழிபாடுதான். இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற ஹிந்து மத ஆலயங்கள் நாடெங்கும் பரவியிருப்பதால் அவற்றுக்குத் திருப்பணி செய்து, அங்கு வழிபாடுகள் முறைப்படி நடக்கச் செய்தலே மத ரட்சணைக்கு மையமாக இருந்ததும், இருப்பதும் ஆகும். மாபெரும் அளவினதாக அநேக ஆலயங்கள் கொண்ட ஹிந்து மதத்தில் ஆலயத் திருப்பணிக்குத் தேவைப்படும் திரவியமும் மாபெரும் அளவினதே. இதையும் ஏற்று, காப்புப் பணியை ஆற்றியது முக்கியமாக மன்னர்களும் மக்களுமே; மதத்திற்கென்று ஸ்தாபனமாக அமைக்கப்பட்ட திருமடங்கள் இதில் ஆற்றிய பங்கு சிறியதே.

## பிற மதத்தினர் ஆட்சியில் ஹிந்து மத போஷணையின் நலிவு

வெளிநாட்டுப் புறச் சமயத்தினரின் அரசாட்சி ஏற்பட்டதிலிருந்து இந்த அரசாங்க போஷணை நலிவு காணத் தொடங்கியது. அப் புறச் சமயத்தினரில் மேல் நாட்டிலிருந்து வந்த வெள்ளையரின் ஆட்சி ஏற்பட்ட பின்னரோ, அவர்தம் வாழ்க்கை முறையிலேயே

மோகிக்கத் தொடங்கிச் சொந்தமான சமயக் கலாசாரத்தைப் புறக்கணிக்கத் தலைப்பட்ட ஹிந்து சமுதாய மக்களும் தங்களது மதரட்சணையில் அக்கறை இழக்கலாயினர்.

## சுதந்திரப் போராட்டம் செய்யத் தவறிய விஷயம்; ஹிந்து மதம் கண்ட பாதிப்பு

சுதந்திரப் போராட்டமும்கூட இந்த அம்சத்தில் மக்களை உரிய திசையில் திருப்பிவிடத் தவறிவிட்டது என்ற துரதிருஷ்டவசமான உண்மையைக் கூறாதிருக்கவியலாது. இப்போராட்டத்தின் முக்கியமான தலைவர் மேல்நாட்டினரின் ஆட்சியைக் களைவதோடுகூட, அல்லது அதனினும் முக்கியமாக, அவர்தம் வாழ்முறையில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட மோகத்தையும் களைந்தெறிய வேண்டுமென்ற கொள்கை உடையவராயினும், ஏனைய போராட்டத் தலைவர்களும் அவற்றைப் பின்பற்றிய ஏராளமான மக்களும் அதில் அவ்வளவாகக் கவனம் கொள்ளவில்லை. நாட்டை அந்நியரின் அரசியல் ஆளுகையிலிருந்து மீட்பதொன்றுக்கே முழு கவனமும் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கருதியதால், மக்களின் மனப்பான்மையையும் வாழ்முறையையும் அந்நிய வழிகளின் ஆளுகையிலிருந்து மீட்பதற்கு எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. நாடு அந்நியராட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் பெறும்போது அதிலுள்ள பிரஜைகள் ஹிந்து மதம் மட்டுமின்றி எம்மதத்தினராயினும் ஏதோ ஒரு மதத்தின் மூலம் உள்ளவுயர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் கருதாது, அரசியல் சுதந்திரத்திற்காக மட்டுமேதான் போராட்டம் நடத்தப்பட்டது. எனவே குறிப்பாக ஹிந்து மதஸ்தர் மதாபிமானத்தில் பின்னடைவு காணும் நிலையே நீடித்து வந்தது. அந்நிலையில்தான் இறுதியாகச் சுதந்திரம் வந்திருப்பதும்.

இங்கு கவனத்திற்குரிய அம்சம் யாதெனில், இந்திய மக்களில் ஹிந்துக்கள் மாத்திரம்தான் இவ்விதம் சுயமதாபிமானம் குன்றியது. இஸ்லாமியர் எப்போதுமே தீவிரமான சுயமதப் பற்றும் சமுதாயக் கட்டுப்பாடும் உள்ளோராதலின் அவர்கள் மேனாட்டு வழிகளில் ஹிந்துக்கள் போல் மயங்கி சுய மதக்காப்பில் பின்தங்கவில்லை. கிறிஸ்துவர்களோ அம்மேனாட்டினரின் மதத்தைச் சேர்ந்தோரேயாதலின், அவர்கள் விஷயத்தில் இப்பிரச்னை எழும்பவேயில்லை. அதாவது ஹிந்து மதம் மட்டுமே பாதிப்புற்றது.

சுதந்திரப் போராட்ட காலத்தின் போதும் ஹிந்து சமயத்திற்காகவும் அதன் சமூகத்தினருக்காகவும் சமய ஸ்தாபனம் எனக் கூற முடியாமல் சமூக ஸ்தாபனமாகவே

இருந்து கொண்டு எழுச்சியுடன் போராடிய ஓரிரு இயக்கங்கள் ஆற்றிய சிறு பங்கைத் தவிர, மாபெரும் சுதந்திரப் போராட்ட இயக்கம் எதுவும் செய்யாமல், ஹிந்து சமயம் பின்னடைவிலேயே உள்ள நிலையில்தான் முடிவாகச் சுதந்திரம் வந்திருப்பது.

இந்த நடைமுறை உண்மைகளை ஹிந்துக்களல்லாதாரும் நடுவு நிலையிலிருந்து நோக்கினால், சுதந்திர பாரத அரசாங்கமானது மக்களின் உள்ள உயர்வுக்குத் தனது பங்கான பணியை ஆற்ற வேண்டுமென்றும், மதத்தின் மூலம்தான் அவ்வுயர்வு நடப்பதாக சரித்திரம் காட்டியிருப்பதால் இங்குள்ள எல்லா மதங்களுக்கும் எம்மதமாயினும் போஷணையளிக்க வேண்டுமென்றும் உணர்ந்து எதைச் செயற்படுத்துமாயின், மிகவும் பாதிப்புற்றிருப்பதும் மிகப் பெரும்பாலோருக்கு உரியதுமான ஹிந்து மதத்திற்கே அரசாங்கததின் வழியாக அதிகப் பொருள் உதவி அளிக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளவே செய்வர்.


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் நம் இந்து மதத்தின் பெருமை.

மனித வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியது, உருவ வழிபாட்டைக் கடைபிடிப்பதாகும். உருவ வழிபாடு உள்ளவர்களுக்கு ஒரு கவலையும் இல்லை. நம்முடைய குறைகளை ஆண்டவன் ஆர்வத்தோடு கேட்கிறான். ஆசி வழங்குகிறான். அதனால் நாம் மனத் திருப்தியோடு வாழ்கிறோம்.

எந்த நண்பர்களிடம் போய்த் துன்பத்தைச் சொன்னாலும் 'எனக்கும் கூடத்தான் துன்பம் இருக்கிறது' என்று திருப்பிச் சொல்வார்கள். ஆனால் எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை இறைவனிடம் முறையிட்டால் அதை உடனே அவர் பரிசீலனை செய்வார்.

இறைவனுக்குக் கைகால்கள் இருப்பதால்தான் நம் கைகால்களின் பிரச்சினைகளை அறிந்து அருள் தருகிறார். அதனால்தான் நாயன்மார்களும் அருளாளர்களும் பாடல்களைப் பாடி இறைவனை நேராகக் கண்டு அனுபவித்தார்கள்.



அவர்கள் நெறியோடு வாழ்ந்ததால் தான் அவர்களுக்குச் கடவுளே வந்து தரிசனம் கொடுத்ததாகக் கூறுவார்கள். உருவ வழிபாடு மூலம்தான் அவர்களுக்குக் கடவுள் தரிசனம் கிடைத்தது.

அதுபோல நாமும் உருவ வழிபாட்டில் நம்பிக்கை வைத்து, 'குரங்குப் பிடி' என்பார்களே அது போல, கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய மனது அப்படியும் இப்படியும் கொஞ்சம் சலனம் அடையும். ஆனாலும் உறுதி தளராமல், கடவுள்மீது முழு நம்பிக்கை கொண்டு ஆழமான அன்பு காட்டிப் பக்தியை வளர்த்துக் கொண்டால் நம்மை யாராலும் எதுவும் செய்து விட முடியாது.

அப்படி ஒரு மனோபாவத்தை நாம் வளர்த்துக் கொண்டால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

மனோபலத்துக்கு எடுத்துக்காட்டு ஆஞ்சநேய ஸ்வாமிகள். மற்ற சாமிகளுக்கு அலங்காரம் செய்ய வேண்டும். அர்ச்சனை செய்ய வேண்டும், அப்போது தான் பலன் கிடைக்கும். ஆனால் ஆஞ்சநேயரை நினைத்தாலே பலன் கொடுப்பார். மனோபலம், புத்தி, பலம், தேக பலம், எல்லாவற்றையும் ஒருங்கே தரக் கூடியவர் ஆஞ்சநேயர்.

ஏனென்றால் அவர் ராமபிரானுக்கு எந்த நேரமும் சேவையே செய்து கொண்டு எல்லா பலமும் வளமும் பெற்றவர். எந்தவித மனோ விசாரங்களும் இல்லாமல் இருதயச் சுத்தியோடு இருந்தவர்.

அவருடைய இருதயம் முழுவதும் ராமபிரான் மட்டுமே குடிகொண்டு இருந்தார். மற்ற மூர்த்தி வழிபாடுகளில் அந்தந்தத் தெய்வங்களை மட்டுமே அந்தந்த உருவங்களில் தரிசிக்க முடியும்.

ஆனால் ஆஞ்சநேயரை வணங்கும்போது மட்டும் அவருக்குள்ளே இருக்கும் இராமபிரானையும் சேர்த்தே வணங்குகிறோம். அதனால் நமக்கு இரட்டிப்புப் பலன்கள் கிடைக்கும்.

அப்படிப்பட்ட வலிமையான ஆஞ்சநேயரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பக்தி செலுத்தினால் நல்ல பலன்களை அடையலாம்.

எல்லா சமுதாயத்திலும் சில ஏற்ற தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளை எல்லாம் நாம் ஒற்றுமையாக இருந்து சரி செய்ய வேண்டுமே தவிர, மூன்றாமவர்க்கு இடம் தந்து விடக்கூடாது.

நம் சமுதாயத்தை நாமே சீர்திருத்தம் செய்ய வேண்டும். ''அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே'' என்று தான் அழைக்கிறோம். வேறு எந்தப் பெயரும் இட்டு அழைக்க மாட்டோம்.

இராம லக்ஷ்மணர் போல நாமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ராமர் தாய் வேறு- லக்ஷ்மணர் தாய் வேறு. இருவேறு தாய் வயிற்றில் பிறந்தாலும் இராமரும், லக்ஷ்மணரும் எப்படி ஒற்றுமையாக இருந்தார்களோ, அப்படி நாமும் மாற்றான் தாய்க் குழந்தைகளிடமும் ஒற்றுமையைக் காட்ட வேண்டும்.

ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான் வாலியும், சுக்ரீவனும். அவர்களைப்போல வேறுபாடு ஆகிவிடக் கூடாது. அவர்கள் பரஸ்பரம் சண்டை போட்டே மாய்ந்து போனார்கள்.

நம்முடைய நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். நமது ஏற்றத் தாழ்வுகளை பொருளாதாரத் துறையாகட்டும், கல்வித்துறையாகட்டும், பணித் துறையாகட்டும், எந்தத் துறையிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றி ஒற்றுமைப்படுத்த வேண்டும்.

நமக்கு எந்தப் பயமும் இல்லை. சட்டத்தினால் ஆகட்டும். மாற்றுச் சமயத்தினால் ஆகட்டும். கவலை இல்லை. நாம் இந்து என்ற நினைப்பை விட்டு விடாமல் நம் உரிமைகளை எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.

நாம் எல்லாம் இந்து என்ற ஒற்றுமை உணர்வு எப்போதும் நமக்கு வேண்டும்.

'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று தேவாரத்திலே பாடியிருக்கிறார்கள். அப்படிப் பரம்பொருளை உணர்ந்து வாழ வேண்டும். நமக்கு எதைப் பற்றிய கவலையும் தேவையில்லை. நமக்கு எதைப்பற்றிய பயமும் தேவையில்லை. நமக்கு எந்தவித சந்தேகமும் இனித் தேவை இல்லை.

இறைவனின் செல்வத்தை, இறைவனின், 'இறவா' செல்வத்தினைப் பெற்று நாமும் இறவா நிலையை அடைய முடியும். மாற்றானுக்கு இடம் கொடுக்காமல், ஒற்றுமையாக இருந்து நல்ல நிலையில் வாழ வேண்டும்.

ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய எல்லோரும் ஒத்துழைப்பு தரவேண்டும். அரசியல் பின்னணியில் நடைபெறும் சமுதாயச் சீர்கேடுகளை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அந்த ஏற்றத் தாழ்வுகளை அவர்களே ஒருநாள் சரி செய்வார்கள்.

ஆனால் நிஜமாகவே உள்ள சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நாம் எல்லோருமே சேர்ந்து சரி செய்ய வேண்டும். கோயிலிலே எப்படி 63 நாயன்மார்களை ஒன்றாக வைத்திருக்கிறார்களோ அப்படி நாம் எல்லா சமுதாயத்தினரும் ஒன்றுகூடிச் செயல்பட வேண்டும்.

இதற்கு முன்பு பேசிய ஒருவர் 'விடிவெள்ளி' அம்பேத்காரைப் பற்றிக் குறிப்பிட்டார். அம்பேத்கார் சங்கத்திற்கு நாங்களே முயற்சி எடுத்து, நிலம் வாங்கி கடனும் கொடுத்து, மான்யமும் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நாம் எதற்குமே பின்தங்கியது இல்லை. தேவை என்றால் முதலாவதாக முன்சென்று தேவைகளைச் செய்வோம். நாம் வலிய எங்கும் போகமாட்டோம். வந்தால் விடவும் மாட்டோம். அப்படிப்பட்ட நிலையில்தான் இந்தக் கூட்டத்தை திருச்சியில் கூட்டியிருக்கிறார்கள்.


விநாயகர் பெருமான் அருளாலே எந்தவித இடர்ப்பாடுகளும் இல்லாமல் நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நம் சமயமும், சமுதாயமும் ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்று வாழ்த்தி ஆசி கூறி விடைபெறுகிறோம்.

'ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...'

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## கோடட், தெலுங்கானா



**கராக்ரே வஸதே லக்ஷ்மி,**
**கரமத்யே ஸரஸ்வதி**
**கரமூலேது கௌரி:**
**ஸ்யாத் ப்ரபாதே கர தரிசனம்-**

நமக்கு துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி அவர்களின் அனுக்ரஹம் தேவை. அதனால், சர்வ ஜன சர்வ தேவதா என்ற புத்தகம் உங்களுக்கு கொடுக்கிறார்கள். அந்த புத்தகங்களை நீங்கள் படித்து, குழந்தைகளுக்கும் கற்பித்து- சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் எங்கெல்லாம் இந்த மாதிரி மண்டபம், மற்றும் கோவில்கள் உள்ளதோ, அங்கு ஸ்தோத்திர வகுப்புகள் நடத்த வேண்டும். ஒரு பாரத பிரஜையாக நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவு முக்கியம். அரசியல் செய்திகள் நமக்கு நிறைய தெரியும். அமெரிக்காவில் என்ன செய்கிறார்கள், மற்ற நாடுகளில் என்ன நடக்கிறது என்று நமக்கு தெரியும். நமக்கு தேவையான தார்மீக அறிவு வளர வேண்டும். பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் புராணம், மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றை கற்றுத் தர வேண்டும். ஹரிகதா என்றால் என்ன ? பஞ்சாங்கம் என்றால் என்ன? சாஸ்த்ரிய சங்கீதம் என்றால் என்ன? பரத நாட்டியம் என்றால் என்ன? சில்ப சாஸ்திரம் என்றால் என்ன? வீடு கட்ட வேண்டும் என்றால், நாம் நினைத்த படி கட்டுதல் அல்ல. காஷ்யப மகரிஷி, மரீஷி மகரிஷி அவர்கள் கூறியபடி அர்த்த மண்டபம், மகா மண்டபம், பலி பீடம், த்வஜ ஸ்தம்பம், பிராகாரம், புஷ்கரிணி, ரத வீதி எல்லாம் செய்ய வேண்டும். குளம் எவ்வளவு அங்குலம் இருக்க வேண்டும் என்று உள்ளது. நமது கணிதம் கூட, நமது சமஸ்க்ரித பாஷையில் உள்ளது. அவை ஏக, தச, சத, சஹஸ்ர, கோடி என்று இன்னும் உள்ளது. நமது கணித சாஸ்திரத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்துக்களாகிய நாம் படிப்புடன், இந்து தர்மத்தை பற்றியும் படித்து அறிந்து கொள்ள வேண்டும். நமது முன்னோர்கள் கோவில்கள் கட்டினார்கள். நீங்களும் அதை நன்றாகப் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள். சாஸ்திரப்படி உள்ளதா என்று நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அனைத்து கோவில்களுக்கும் நல்ல அர்ச்சகர்கள், ப்ரவ்சனம் செய்பவர்கள், அவர்களுக்கு communication skill, மற்றும் எந்த இறைவனுக்கு எந்த பூ உகந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டும், பூஜை சமயத்தில் எந்த புஷ்பம் பயன்படுத்த வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும். அடுத்தது புஷ்பகரிணி. அங்கு பிரம்ம உற்சவம் சமயம் அனைத்து தேவர்களும் வருகிறார்கள். நித்யம் செய்ய வேண்டிய பூஜைகள், பதினைந்து நாட்களில் செய்ய வேண்டிய பூஜைகள், மாதம், வருடம் செய்ய வேண்டிய பூஜைகள் த்வஜா ரோஹனம், வாகன சேவை, அதன் தாத்பரியம், கருட சேவை என்றால் என்ன, நந்தி வாஹனம் என்றால் என்ன என்று அறிந்து கொண்டு, நமது பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும். கோவில்கள் கட்டுவது முக்கியம் என்றாலும், அதை பரிபாலனம் செய்தல் மிக முக்கியம். வட இந்தியாவில் ஒருவர் கோவில் கட்டி, அதை காஞ்சி மடத்திற்கு தந்து பராமரிக்க அளித்துள்ளார். கோவில் கட்டிய குடும்பம் குறைந்தது நூறு வருடமாவது பரமாரிக்க வேண்டும். அப்பொழுது தான் குடும்பத்திற்கு நல்லது. அதாவது என்ன வென்றால், பரிபாலனம் கூட முக்கியமான விஷயம் இந்து மதத்தில். **தானத்து சுவர்க்கம் அவாப் நோதி. பாலனாத்து அச்சுதம் பலம்.** ஸ்கந்தகிரியில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பழைய கோவில்கள் புனர் நிர்மாணம் செய்ய வேண்டும். கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். ஜீர்நோத்தாரணம் செய்து, கோவில்களில் பூஜை நடக்க வேண்டும். தூப, தீப, நெய்வேத்யம் நடக்க வேண்டும். அதற்கு நாம் பிரசாதம் கூட செய்ய வேண்டும். ஜீர்நோதாரணம் என்பது புதிதாக கட்டிய கோவில்களை விட முக்கியம். பழைய கோவில்கள் ஜீர்நோத்தாரணம் மிக முக்கியம். காஞ்சி பீடம் தரப்பில் கோவில்கள் கட்டுகின்றோம். எங்கே என்றால் - சிக்கிம், அசாம், மேகாலயா, அருணாச்சல பிரதேசம் மற்றும் அந்தமானில் திட்டம் உள்ளது. நமது எல்லைப்பகுதியில் உள்ள இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நமது தேசம் பத்திரமாக இருக்க வேண்டும். சமஸ்க்ரிதம் நாம் காப்பாற்ற வேண்டும். நமது சாஹித்ய பிரசாரம், காளிதாஸ் யார், வால்மீகி யார்? சதகங்கள் எழுதியவர்கள் யார்? இப்பொழுது ஐந்து சதகம் குறித்து போட்டி வைத்தோம் - குமார சதகம், குமாரி சதகம், காலஹஸ்தி சதகம், வேமன சதகம், சுமதி சதகம் - இதையெல்லாம் பிரசுரம் செய்து, NRI க்கு அனுப்பி வைக்கிறோம். இந்த தேசத்தில் இருந்து தூர தேசத்தில் உள்ளவர்களுக்கு, நமது மொழி, நமது கலாசாரம் தெரிய வேண்டும் என்று ஏற்பாடு செய்து புத்தகங்கள் அனுப்பி வைக்கிறோம்.

தமிழ்நாட்டில் ஐம்பது லக்ஷம் தெலுங்கு மக்கள் உள்ளார்கள். அவர்களுக்கு கூட, ஹிந்தி பிரச்சார சபா போல், தெலுங்கு பிரச்சாரம் செய்கின்றோம். ஆங்கில மொழியில் படிக்கும், தெலுங்கு குழந்தைகளுக்கு, P.V. நரசிம்ஹா ராவ் , கல்வித்துறை அமைச்சராக இருந்த சமயம், காஞ்சி மகா ஸ்வாமிகள் அவருக்கு கூறினார்கள் - G என்றால் கணேஷா என்று இருக்க வேண்டும். அதை நரசிம்ஹா ராவ் அவர்கள் , மஹா ஸ்வாமிகளின் நூறாவது ஜெயந்தியின் பொது , மஹா சுவாமிகளிடம், தாங்கள் ஆக்ஞை செய்ததாகக் கூறினார். அதற்காக அ for அர்ஜுனா, ஆ for பீஷ்மா, இ for காவேரி, ஈ for துர்கா என்று தயார் செய்துள்ளோம். அம்மாதிரி, ஹிந்தியிலும் தயார் செய்துள்ளோம்.

நமது ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஹரித்வாரில் இருந்த சமயம், ஹிந்தியில் கூட தயார் செய்தார். நமது கலாசாரம், ஆர்ஷியா கல்வி தெரிந்து கொள்ள, பரீக்ஷய என்ற ஒரு திட்டம் உள்ளது. கணபதி ஸ்தபதி என்பவர் ஆந்திர பிரதேசத்தில் பல கோவில்கள் கட்டினார்கள். பத்மஸ்ரீ பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் காஞ்சி ஸ்வாமி அவர்களின் பக்தர். இங்கு ஓய்வு பெற்று கொண்ட பிறகு, காஞ்சியில் வீடு எடுத்துக் கொண்டு, நமது சுவாமிகளிடம் சேவை செய்தார். அங்கே சில்ப பாடசாலை துவங்கினார். அதன் மூலம் நூறுக்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் வந்து கற்றுக் கொண்டார்கள். நிறைய நேரம் எடுத்துக் கொண்டு கற்றுத் தருதல் இக்காலக்கட்டத்தில் கஷ்டம். அதனால் அவர்கள் அனுகூலம் பார்த்துக் கொண்டு கற்றுத் தர வேண்டும். பரீக்ஷயா என்ற திட்டம் கீழ் அதை நடத்திக் கொண்டு வருகிறோம்.

காஷ்மீரில் கடந்த பத்து வருடங்களாக காஞ்சி மடத்தின் சார்பில் விஷ்வ சாந்தி யக்னம் நடைபெறுகிறது. இந்த வருடத்தில் கூட வேத பண்டிதர்கள் சென்று வந்தார்கள். காஷ்மீரில் அமைதி நிலவ வேண்டும் என்று கருதி, ஜெயேந்திர ஸ்வாமிகள் தானே சென்று, அங்கே சங்கராச்சாரியா மலை என்று ஒன்று உள்ளது. ஸ்ரீநகரில், அங்கு சென்று அபிஷேகம் செய்து வந்தார்கள். இப்பொழுதும் அது நடைபெறுகின்றது. தேசம், சமாஜம், வ்யக்தி இம்மூன்றுக்கும் நல்லது நடைபெற, நமதிடையே உள்ள நல்ல விஷயங்களை நாம் செய்யாவிடில், நாம் தூரமாக சென்று விடுகிறோம். இதை செய்ய வேண்டும் என்று சொல்பவர்கள் குறைவு. இதை நன்றாக செய்கின்றீர்கள் என்று சொல்பவர்கள் இன்றும் குறைவு. இந்த சின்ன வயசில் எதற்கு ஆரத்தி, பூஜை , அறுபது வயது ஆனபின் செய்யலாம் என்று கூறுதல்; சனாதன சேவா செய்ய வருபவர்களை, இப்பொழுது எதற்கு வானப்ரஸ்தம் என்று கூறாமல் இருக்க வேண்டும். பல வித்யாலய நமது தேசத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஓங்கோல் அருகில் பொதிலி என்ற இடத்தில் சனாதன தர்ம சேவா கிராமம் ஒரு முப்பது ஏக்கர் நிலத்தில் நமது மொழி, நமது கலாச்சாரம்,

பிரச்சாரம் செய்ய ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கிறது. தெலுங்கானாவில் கூட சனாதன தர்ம சேவா கிராமம் என்ற ஒன்று முயற்சியில் உள்ளது. நமது தேசத்தில் நமது மொழி, நமது கலாச்சாரம் பிரசாரம் செய்ய ஏற்பாடு நடந்து கொண்டு உள்ளன. இங்கிருந்து ஜெக்கயா பேட்டை செல்கின்றோம். அங்கிருந்து எழுறு , அங்கே ஏலாபுரி சம்ஸ்கிருத கலாசாலை, சமஸ்க்ரித பாஷா பிரசாரத்திற்கு மண்டலீக வேங்கடேச சாஸ்த்ரி அவர்கள், அந்த காலத்தில் பெரும் பண்டிதர். அவர் ஆரம்பித்த பாடசாலைக்கு செல்கிறோம். நடுவில், விஜயவாடாவில் ஒரு பக்தர் - மகர தங்க தோரணம் பெரிதாகச் செய்து, லப்பிப்பேட்டையில் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோவிலில் சமர்ப்பணம் செய்ய உள்ளார். அங்கு செல்கின்றோம். சாமல் கோட்டாவில் கணபதி சாஸ்திரி இல்லம் சென்று, பெத்தா புரம் சென்று, பின் காகிநாடாவில் இரண்டு மாதம் அங்கு உள்ளோம்.

தெலுங்கனா, ஹைதராபாத் இப்பொழுது வந்தோம். பின் கிராமப்புரம் விஸ்தாரமாக வர வேண்டும். தர்மப் பிரசாரம் நமது தேசத்தில் செய்ய வேண்டும். இங்கு சில பண்டிதர்கள் புத்தகம் சேர்த்தார்கள் - நீலகண்டீயம் என்ற ஒரு புத்தகம். மட்டப்பள்ளி ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ ஸ்துதி, நக்ஷத்திர மாலா ஸ்தோத்திரம். சிவானந்த மூர்த்தி அவர்கள் காஞ்சி மடத்திற்கு வேண்டியவர். பல நல்ல காரியங்கள் செய்தவர். நல்ல காரியங்கள் தொடங்கி வைத்தார். அதில் பல அதிகாரிகளைக் கூட பங்கேற்க வைத்தார்.

அதே போல் L.V. சுப்ரமணியம் அவர்கள் Charity Management Course & Business Management Course அனைவருக்கும் தெரியும். Charity Management - ஒரு வேத பாடசாலை எவ்வாறு நடத்த வேண்டும்? ஒரு கோ சாலை எவ்வாறு நிர்மாணிக்க வேண்டும்? ஒரு வ்ருத்தாஸ்ரமம் எவ்வாறு நடத்த வேண்டும்? தினமும் பூஜை எவ்வாறு செய்ய வேண்டும்? அதுபற்றியெல்லாம் ஒரு பாடத்திட்டம் நடைபெற உள்ளது. இன்னொரு புத்தகம் - கிருஷ்ணம்ம கதா - கிருஷ்ணா நதியை சுற்றி உள்ள திவ்ய க்ஷேத்திரங்கள் குறித்து புஸ்தகம் எழுதி உள்ளார்கள். இம்மாதிரி சாகித்ய, புராணம் சம்பந்த புஸ்தகங்கள் சமர்பித்தார்கள். நீங்கள் அனைவரும் இந்த நல்ல காரியங்களில் ஈடுபட்டு, தர்மோ ரக்ஷதி ரக்ஷிதஹா என்பதற்கு ஏற்ப, நாம் தருமத்தை பரிபாலனம் செய்து, அந்த தர்மம் மூலம் அனைவருக்கும் நல்லது பெருக வேண்டும் என்று பிரார்த்தனை, பிரயர்த்தனம் செய்து, காஞ்சி காமாக்ஷி அம்மா அவர்களின் ஆசியும் அனுக்ரகமும் அனைவருக்கும் பெற பிரார்த்தனை செய்கிறோம்.

ஹர ஹர நம பார்வதி பதயே, ஹர ஹர மகா தேவா

(தொடரும்)

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

*ந ஹி ரே ஸங்கா*

**छर न हि रे न हि शन्का काचिन्न हि रे न हि शन्का**
**अजमक्षरम् अद्वैतमनन्तम् ध्यायन्ति ब्रह्मपरम् शान्तम्** **(न हि)**
**ये त्यजन्ति बहुतरपरितापम् ये भजन्ति सच्चित्सुकरूपम्** **(न हि)**
**परमहम्सगुरुभणितम् गीतम् ये पटन्ति निगमार्थसमेतम्** **(न हि)**

*பொருள் : அடே! அச்சம் எதுவும் இல்லையே, அடே! யாதொரு அச்சம் இல்லையே, எவர்கள் பிறப்பில்லாததும், அக்ஷரம்யிருப்பதும், அத்வைதமாயிருப்பதுமான பரப்ரம்மத்தை த்யானிக்கிறார்களோ அவர்களுக்கு அச்சமில்லை பெரிய கஷ்டங்களை விட்டு விடுகிறார்களோ சச்சிதானந்த ரூபத்தை எவர்கள் பஜிக்கிறார்களோ அவர்களுக்கு அச்சமில்லை. வேதப்பொருளோடு கூடியாதாயும், பரம ஹம்ஸ குருவினால் உபதேசிக்கப்பட்டதுமான கீதத்தை எவர்கள் வாசிக்கிறார்களோ அவர்களுக்கு அச்சமில்லை.*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# ராஜதரங்கிணி 14

பி. ஆர். கண்ணன்

**தரங்கம் - 8**

**பார்வதி ஸ்துதி**

**ப்ரௌடா: கஞ்சுகிநோ ஜரத்வரவ்ருஷ:**
**குப்ஜஸ்துஷாரத்யுதிர்நித்யாப்தோபி பஹிஷ்க்ருத:**
**பரிகர: ஸோயம் ஸமஸ்தோப்யஹோ ।**

**அர்தாத்யத்வஸதீக்ருதாத்பகவதா சாரித்ரசர்யாவிதா ஸா**
**பிந்த்யாத்துரிதம் சராசரகுரோரந்த: புரம் பார்வதீ ॥ 1 ॥**

'பார்வதி - அசையும் பொருள், அசையாப் பொருள்களின் உலகிற்குத் தலைவரின் தேவி - தங்களுடன் வழக்கமாக உள்ள பாம்பு (காவல் அதிகாரி), காளை (கிழட்டு), பனிபோன்ற சந்த்ரன் (கூனி) ஆகியோரை வெளியேற்றிவிட்டாரே; இது ஆச்சர்யமே; ஏனெனில் குணம், நடத்தை ஆகியவற்றை அறிந்த பகவான் தன்னுடன் பார்வதியை பாதி சரீரமாக இணைத்துக் கொண்டாரே. அத்தகைய பார்வதிதேவி கஷ்டங்களைப் போக்கட்டும்.'

இத்தரங்கம் ராஜா உச்சலருடன் (கி.பி. 1102) தொடங்குகிறது.

**ராஜா உச்சலர்**

இரண்டாம் லோஹர வம்சத்தைச் சார்ந்த இவர் நல்ல மன்னராகத் திகழ்ந்தார். அதிக வளங்கல் இல்லாவிடினும், இயன்றவரை மக்களுக்கு சுபீக்ஷத்திற்கு ஏற்பாடு செய்தார். ஒருசமயம் கடும் பஞ்சம் நிலவியபோது, அரண்மனை களஞ்சியத்திலிருந்தே உணவுத்தானியங்களை வழங்கினார்.

**தேநாநுபசிதாங்கேந ப்ராயஸோ விநிவாரிதா: ।**
**அநூருணேவ ஸத்த்ருஷ்டித்வம்ஸிநோ த்வாந்தஸம்சயா : ॥ 50 ॥**

'கால் ஊனமுற்ற அருணன், நல்லோர் பார்வையை மறைக்கும் இருட்டுக்குவியலை விரட்டுமாப்போலே, ராஜா தன்னிடம் வளக்குறைவு இருப்பினும், தர்மத்தை மறைக்கும் இடைஞ்சல்களை விலக்கினார்.' இந்த்ரன் மழையை வர்ஷிப்பதுபோல, சிவராத்ரி போன்ற உத்ஸவ காலங்களில் ஜனங்களுக்கு வேண்டியவற்றை தாராளமாக

வழங்கினார். நந்திக்ஷேத்ரத்தை புனருத்தாரணம் செய்தார். பரிஹாஸகேஸ்வருக்கு புதிய விக்ரகம் செய்தார். த்ரிபுவனஸ்வாமி ஆலயத்தையும் புதுப்பித்தார்.

கல்ஹணர் சில முக்யமான வாழ்வியல் உண்மைகளை மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

**விஷவ்ருக்ஷோ நியோகீ ச யதேவாஸ்ரித்ய வர்ததே ।**
**சித்ரம் கரோதி தஸ்யைவ ஸ்தாநஸ்யாநபிகம்யதாம் । 91 ।**

**விஸ்ம்ருதிம் லப்தராஜ்யாநாம் பூர்வஸம்கல்பவாஸநா: ।**
**ப்ரயாந்தி ப்ராப்தஜநுஷாம் கர்பவாஸஸ்ப்ருஹா இவ 118**

‘அரசாங்க அதிகாரியும், விஷவ்ருக்ஷமும் தாங்கள் எந்த மண்ணில் வளர்கின்றனரோ, அம்மண்ணையே நெருங்கமுடியாமல் செய்து விடுவர்; இது ஆச்சர்யமே.’

‘ராஜ்யத்தை அடைந்தவர்களின் திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன; பிறக்கும் குழந்தைகள் பிறப்பதற்குமுன் கர்ப்பத்திலிருந்தபோது இருந்த விருப்பங்களை மறப்பதுபோல்.’ உச்சலர் இம்மாதிரியான விஷயங்களில் ஜாக்ரதையாக இருந்தார். ஆனால் காலக்ரமத்தில் தீய மந்த்ரிகளின் ஆலோசனையின்பேரில் தீய பழக்கங்களை மேற்கொண்டார்.

**ஸக்யம் காரணநிர்வ்யபேக்ஷமிநதாஹங்காரஹீநா ஸதீ பாவோ**
**வீதஜநாபவாத உசிதோக்தித்வம் ஸமஸ்தப்ரியம் ।**
**வித்வத்தா விபவாந்விதா தருணிமா பாரிப்லவத்வோஜ்ஜிதோ**
**ராஜத்வம் விகலங்கமத்ர சரமே காலே கிலேத்யந்யதா ।। 161 ।।**

‘நட்பு காரணமின்றியும்; சக்தி அகங்காரமின்றியும்; பெண்ணின் கற்பு ஜனங்களின் அபவாதமின்றியும்; பொருத்தமான சொல் எல்லோருக்கும் பிடித்தமாகவும்; கல்வி சக்தியுடனும்; இளமை தடுமாற்றமின்றியும்; அரசு கலங்கமின்றியும் தழைக்க வேண்டும்; ஆனால் தற்போது இவையாவும் விபரீதமாகவே உள்ளன.’

உச்சலர் இறுதியில் இரக்கமின்றி உட்பகையினால் கொல்லப்பட்டார். பிறகு அரியணையேறியவர்கள் ரட்டர், ஸல்ஹனர ஆகியோர் மிகவும் தீயவராக இருந்தார்கள். பின்னர் ஸுஸ்ஸலர் ராஜாவானார். ஆலயங்களை கட்டினார். அவரும் உட்பகையினால் வெளியேற்றப்பட்டார். பின்னர் பிக்ஷு என்பவர் ராஜாவானார். நன்றாகத் துவங்கிய அவரும் கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகி, மதிப்பிழந்தார்.

(தொடரும்)

# வைகாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *19-05-2024* | ஞாயிறு | ஏகாதசி |
| *20-05-2024* | திங்கள் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| *21-05-2024* | செவ்வாய் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *22-05-2024* | புதன் | ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ ; பௌர்ணமி பூஜை ; வைகாசி விசாகம் |
| *23-05-2024* | வியாழன் | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| *24-05-2024* | வெள்ளி | ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹா ஸ்வாமிகள் ஜயந்தீ |
| *25-05-2024* | சனி | மூலம் தேர் |
| *26-05-2024* | ஞாயிறு | மூலம் வேத பாராயணம் ஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆஸ்ரஸ்மஸ்வீகார தினம் |
| *27-05-2024* | திங்கள் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| *29-05-2024* | புதன் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| *02-06-2024* | ஞாயிறு | ஏகாதசி |
| *03-06-2024* | திங்கள் | த்வாதசி |
| *04-06-2024* | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |

*17-05-2024; 24-05-2024 ; 31-05-2024 07-06-2024; 14-06-2024*
வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத
ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# தாயுமானவர்



வேதாரண்யம் கோவிலின் விசாரணைக் கர்த்தா, கேடிலியப்ப பிள்ளை தம் மனைவி கற்பிற்சிறந்த கஜவல்லியம்மையுடன் இல்லறம் நடத்தி உள்ளத்தை இறைவனடியில் வைத்து வந்தார். தம் தமையன் பிள்ளையில்லாக் குறையால் வருந்தவே, தன் மைந்தன் சிவ சிதம்பரத்தையே அவருக்கு தத்து கொடுத்தார். இச்சமயத்தில், திருச்சியில் ஆண்ட திருமலைநாயகர் (1704-1731) கேடிலியப்ப பிள்ளையின் அறிவு, தெளிவு, திறமை, ஒழுக்கங்களைக் கேட்டு, மெச்சி, தம் ஆஸ்தானத்தில் பெரிய உத்தியோகத்தில் அமர்த்திப் போற்றினார்.

கேடிலியப்ப பிள்ளையும், திருச்சி தாயுமானக் கடவுளை உருகி வழிபட்டு, மைந்தனை வேண்டவே அவரருளால், ஒரு ஞானச்சுடர் புதல்வன் அவதரித்தான். தாயுமானவர் என்றே பெயரிட்டனர். அறிவாளியான தந்தை தன் அருமைக் குழந்தைக்கு தமிழ், ஸம்ஸ்க்ருதம் இரண்டிலுமுள்ள நூல்களைப் பயிற்றுவித்தார். சிறு பிராயத்தில் தந்தை சிவனடி சேர்ந்ததும் இளந்தாயுமானவரின், பொலிவும், புலமையுங் கண்ட சொக்கலிங்க நாயகர் தந்தையின் பதவியில் அம்மைந்தனை அமர்த்தினார். தாயுமானவரின் புலன்கள் அரசு ஊழியத்திலிருப்பினும், சிந்தை ஞான விசாரத்திலேயே இருந்தது. உடலைத் தொழிலிலும் உள்ளத்தை சிவத்திலும் வைத்து வந்த தாயுமானவர் பரபரப்புடன் ஞானகுருவைத் தேடினார். ஆர்வம் முற்றினால் அருளாசான் எய்துவான்.

ஒரு நாள் வழக்கப்படி திருச்சி தாயுமானவர் கடவுளைத் தரிசிக்க மலைப் படி ஏறிச் சென்றார். அங்கு தக்ஷிணாமூர்த்தி சந்நதியில் சிவராஜயோகி ஒருவர் வீற்றிருக்கக் கண்டார். அவரே திருமூலர் மரபில் வந்த மௌன சுவாமிகள். அருட்காந்தம் இழுக்கவே, அடி பணிந்து வணக்கமுடன் ஆசானைத் தொடர்ந்து ஓர் தனியிடம் சேர்ந்தார் நமது

தாயுமானவர். ஆசானாகிய மௌன குருவும் அன்பனின் பக்குவமறிந்து திருவடி தீட்சை செய்து, சித்தத்துடன் ஈரறக் கலந்து நிற்கும் சிவாத்துவைத நெறிகாட்டி மெய்கண்ட சாஸ்திரங்களின் உண்மையை விளக்கி, 'அன்ப! சிறிதுகாலம் நீ இல்லறத் திலிருந்து ஒரு புதல்வனையும் பெற்றபின், நாம் வந்து உனக்கு நிஷ்டை கூட்டுவோம். சும்மா இரு' என்று சொல்லிப்போனார். பிடித்தது ஞானத்தீ; உடல், பொருள், பெண்டிர், போகம் என்று மயங்கும் உலகாயதஞ்சாராமல், வேதாந்த சித்தாந்த ஸமரஸ் சிவானுபூதியை ஒரு சொல்லால் உணர்த்தப்பட்டவராய் இன்ப துன்பம் சமமாயுணர்ந்து, முக்திநெறியறிய அவனருளே தனக்குத் தாரகம் என்று தன் குருதேவனை நினைத்துருகி, சும்மாயிருக்கும் சூக்ஷ்மத்தைக் கருதியிருந்தார்.

மன்னன், நமது பரம ஞானியின் பரிபக்குவத்தை யறியாமலில்லை. ஒரு நாள் அவரிடம் சென்று 'சுவாமி! தங்களுக்கு இந்த அரச ஊழியத் தொல்லை வேண்டாம்; இது தமக்கு மிக இழிவு; தாங்கள் ஞான நிலையில் இருங்கள்; தங்களுக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்து யானும் நலம் பெறுகிறேன்' என்று தாயுமானவரை சுயேச்சையாக விடுவித்து, அன்புடன் சில ஆண்டுகள் அன்னாருக்குப் பணிசெய்து மன்னன் சிவகதி சேர்ந்தான். மன்னர்க்குப்பின் இராணி மீனாட்சியம்மை ஆட்சி செலுத்தி வந்தாள். அறிவும், அழகும், அருட்பொலிவும் மிக்க தாயுமானவரை அரசி வலுவாக நேசித்து, தனது அரசுரிமையுடன் உடல், பொருள் ஆவியெல்லாவற்றையும் அவருக்கு அடைக்கலமாக்கி, முன்னின்றாள் இராணி மீனாட்சி. நமது ஞானப்பிரகாசரோ

**வாளாருங் கண்ணியர் மோகம்--யம**
**வாதைக்கனலை வளர்க்கும் மெய்யென்ற**
**வேளானவனுமெல் விட்டான்--என்னின்**
**மிக்கோர் துறக்கை விதியன்றோ தோழி!**

என்று உறுதிபூண்டு, இராணிக்கு ஹிதமான வார்த்தைகளாடி அன்றிரவே வெளியேறித் தேவையம்பதி என்னும் ராமேஸ்வரத்தை அடைந்தார். அங்கு மலைவளர்க் காதலி யம்மையைப் போற்றி **நமனெனும் அகந்தை தீர்த்து என் சிறு மதியையுண்ட மதிவதனவல்லியே!** உன்னை நினைத்தால் எல்லாப்பேறும் உண்டாகும். மாதர் விழியிலும், மொழியிலும், நடையிலும், பட்டிலும், பொட்டிலும், மயங்காது உன் திருவடிமட்டிலே மனது செல்ல அருள். இனி உன் தொண்டர் பணி புரிய அருள்வாய்

என்று வணங்கி ஆங்கிருக்கையில், தமையன் சிவசிதம்பரம் பிள்ளையும், சிறிய தாயார் மகன் அருளைய பிள்ளையெனும் பேரன்பனும் வந்தனர். அவர்கள் **'மரபு விளங்க, மணம் புரிக'** என்று தாயுமானவரை வற்புறுத்தி வேதாரண்யத்திற்கு அழைத்தேகினர்.

தமது குருவின் மொழிக்கிசைந்து ஆங்கு, அழகும் நல்லொழுக்கமும் வாய்ந்த மட்டுவார்க்குழலம்மையை மணந்து, தகு முறை இல்லற வேள்வி நடத்தினார். கனகசபாபதி யென்ற ஒரு பிள்ளைக் கனியை ஈன்று மனைவி காலகதியடைந்தாள். தன் மகனை தாயுமானவர் அருமையாய் வளர்த்து கல்வி கேள்விகளில் நன்கு பயிற்றி, ஒரு தந்தையின் கடமையை வழுவறச் செய்து, குருவருளை நோக்கியிருந்தார். காலம் கனிந்தது. மீண்டும் மௌன குரு தோன்றி அன்பனே! உள்ளம் பழுத்தது. இனித் துறவுகொள்வாய்' என்று முறைப்படி துறவறமிந்து சிவஞானபோதம் உரைக்கலானார்

பலவாக மாறிமாறி இயக்கும் ஒருவன் உண்டு; அவன் கால தேசக்கட்டுகளற்ற சாட்சி. எல்லாமாய் அல்லதுமாய், உயிருக்கு உயிராய், உள்ளபடி உள்ளவன். பாட்டும் ஒலியும் பழமும் சுவையும், பாலும் வெண்மையும் போன்று ஆண்டவன் ஆன்மாக்களுடன் கலந்துள்ளான். அவன் ஒருவன்; அவனது அருளான சக்தி ஒருத்தி; அதுவாகிய உலகம் சக்திவிலாஸமே; பரம்பொருள் ஆவான்; பெண்ணுமாவான்; இரண்டுமற்றதுமாவான். இவற்றைக் கடந்த ஓர் அருவமுமாவான். இறைவன் சக்தியால் மாயையினின்று உலகம் தோன்றி இயங்கி மாறியடங்கித்தோன்றி நின்றியங்கும். இருவினைப் பயனால் உலகுயிர்கள் போக்கு வரவு செய்யும். வல்லான் வகுத்ததே வாய்க்கால். அவன் ஆணைப்படி அனைத்தும் நடக்கும். இவ்வுடல் மாயா யந்திரம்; உடல், கருவி கரணங்களை அன்றென நீக்கிக்கண்டவிடத்தில் ஓர் அறிவாக ஆன்மா உள்ளது. கதிரொளியின்றி கண்ணாடி முகங் காட்டாது; இறைவனருளின்றி ஆன்மா இயங்காது. உள்ளத்திலுள்ள இன்பப் பொருளை, சிவனை, ஐந்தெழுத்தால் உள்ளே வணங்குக; எங்கும் நிறைந்த ஜோதி! சுகவாரி! அவனன்றி அன்னியங்காணாது சிவோஹம் பாவனை செய்க.

இவ்வாறு உபதேசித்து மோனகுரு சென்றதும், தாயுமானவர் அனைத்தும் துறந்து, காஞ்சி, சிதம்பரம், அருணகிரி, ஆரூர், மதுரை முதலிய சிவஸ்தலங்கள் தோறும் சென்று ஆங்காங்கு பாமலர் வழிபாட்டுடன் அருஞ்செயல்கள் புரிந்தார். அரசன் தனக்கு அளித்த உயர்ந்த பட்டாடையை ஒரு திருக்குலப் பெண்ணிற்கு, அகிலாண்டேசுவரிக்கு அளித்தேனென்று கொடுத்துவிட்டார். ராமேசுவரத்தில் மழையின்மையால் மக்கள் வருந்தவே.

**‘சைவ சமயஞ் சமயமெனில் அச்சமயத்**
**தெய்வம் பிறை சூடுந்தெய்வமெனில்-ஐவரைவென்**
**றானந்த வின்பிலமுந்துவது முத்தியெனில்**
**வானங்காள்! பெய்மின் மழை’**

என்றிசைக்கவே பெருமழை பெய்து ஊர் செழித்தது. பின் ராமநாதபுரத்தில் லக்ஷ்மி நகரத்தில் ஒரு தோட்டத்தில் இன்ப நிஷ்டை கூடினார். அருளையர், கோடிக்கரை, ஞானியார் என்ற இரு சிஷ்யர்கள் கூட இருந்து பணி செய்தனர். அவர்களுக்கு ஒருநாள் ‘இல்லறத்திலிருந்தாலும் ஹிருதயமடக்கியவனே மகாயோகி; துறவறத்திலிருந்தாலும் மனக்குரங்கடக்காதவன் அறிவிலி; சிந்தையடக்கி சும்மாவிருத்தலே அஷ்ட சித்திகளிலும் அரியதோர் சித்தி; எல்லாவுளத்தும் ஒரு பரமனே சுக நடம் புரிகிறான்; **அவனன்றி யானில்லை எனும் அடைக்கலக் கலப்பே முக்திநெறி** என்று அருளி பேரின்ப நிஷ்டை கூடி 1742 வருஷம், தை மாதம் பௌர்ணமியன்று சிவத்தில் கலந்தார்.

## *மகா பெரியவா பொன்மொழிகள்*

1. *பூமியை விட்டுச் செல்லும் முன் ‘என்னிடம் பாவமே இல்லை’ என்னும் உயர்நிலையை அடைய முயற்சி செய்.*
2. *வாக்கு, மனம், உடல் இந்த மூன்றாலும் நற்செயலில் ஈடுபட்டால் தான் பாவத்தில் இருந்து விடுபட முடியும்.*
3. *நாம் நம்மால் முடிந்த நற்செயல்களைச் செய்து வந்தால் போதும். கடவுள் கைகொடுக்கத் தயாராக இருக்கிறார்.*
4. *பேச்சில் பெருந்தன்மையை வெளிப்படுத்தும் பலர், செயலில் சுயநலம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.*
5. *இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்ந்தால் நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்கும் குறைவிருக்காது.*

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி

**மார்ச் 25** - இன்று பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்தில் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். மேலும் பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ மடத்தில் அமைந்துள்ள பிருந்தாவனத்தில் அபிஷேகங்கள் மற்றும் ஹாரத்தி செய்தார்கள்.



பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் அவதார ஸ்தலத்தில் 24.3.24ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக யாகசாலையில் பூர்ணாஹுதிகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட் தினசரி பூஜைகளும், சங்கீத மும்மூர்த்திகளின் அவதார ஸ்தலங்களின் பராமரிப்பையும் மேற்கொண்டுள்ளதுடன் பல்வேறு சங்கீத விழாக்களையும் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள்.

**மார்ச் 30** - கிழக்கு தாம்பரம் ராஜகீழ்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் வித்யா மந்திருக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் மாலை விஜயம் செய்தார்கள். அனுஷ நக்ஷத்திர தினமானதால் விசேஷ பூஜைகளும் தங்க ரதோத்ஸவ சேவையும் ஸ்ரீ மஹா சுவாமிகளுக்கு நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் 'ஐக்யம்' பொருட்கட்சியையும், பரம் வீர் சக்ரா பூங்கா பள்ளி வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு அனுக்ரஹித்தார்கள். இப்பூங்கா 21 பரம் வீர் சக்ரா விருது பெற்றவர்களின் சிலையுடன் அவர்தம் வரலாற்றையும் சித்தரிக்கப்பட்டு அமையப்பெற்றுள்ளது. இக்காட்சியினை வணக்கத்திற்குரிய தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் காலையில் துவக்க வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் லெப்டினன்ட் ஜெனரல் கரன்பீசிங் ப்ரார் மற்றும் ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமி டிரஸ்ட் தலைவர் ஸ்ரீ V. சங்கர் அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் கரைப்படையைச்

சேர்ந்த முக்கய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டதை பார்க்க முடிந்தது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பூங்காவை சுற்றி பார்வையிட்டு ஒவ்வொரு பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களின் வரலாற்றையும் படித்து பார்த்த வண்ணம் வந்தார்கள்.

தொடர்ந்து குழுமியிருந்த பொதுமக்களிடையே அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள். பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் நம் நாடு கலாசாரத்தையும், நல்லிணக்கத்தையும் கொண்டது என்பதில் பெருமையாக உள்ளதை வலியுறுத்தினார்கள். பள்ளி வேதபாடசாலை வித்யார்த்திகளின் வேத கோஷங்களையும் மற்றும் வித்யார்த்திகளின் குழு ஒன்று நிகழ்த்திய பக்த பாடல்கள் மற்றும் பஜனைகளும் நடைபெற்றன. குழுமியிருந்த பக்த பெருமக்களும் அருளாசி பெற்றார்கள்.

மறுநாள் காலை பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் காஞ்சிபுரம் திரும்பினார்கள்.

முன்னதாக பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு விஜயம் செய்து அங்கு கூடியிருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பக்தர்களுக்கும் தரிசனம் தந்து ஆசீர்வதித்தருளினார்கள். மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற பரிசுகளின் காட்சியையும் பார்வையிட்டு அனுக்ரஹித்தார்கள்.

**மார்ச் 31** – பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் இன்று சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் கட்டப்பட்டுள்ள சிட்டி யூனியன் வங்கியின் தலைமை அலுவலகத்தினை துவக்கி வைத்து அருளாசி வழங்கினார்கள். பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வங்கியின் சாதனைகளை (வங்கி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அதன் 800வது கிளையை அயோத்தியாவில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டது வரை) கூர்ந்து பார்வையிட்டார்கள். தொடர்ந்து கூடியிருந்த வங்கி அலுவலர்கள், ஊழியர்கள், கட்டிட வல்லுனர்கள் ஆகியோருக்கு பிரசாதங்கள் வழங்கி அனுக்ரஹ பாஷணம் அளித்தருளினார்கள். மேலும் குறிப்பிடுகையில் வங்கியானது வணிகம், பாரம்பரியம், தொழிநுட்பம் ஆகிய மூன்றையும் ஒருங்கே அமையப்பெற்றது என்றும், இந்திய வணிகத்திற்கும் வெளிநாட்டு வியாபாரத்திற்கம் உள்ள வேற்றுமைகளையும் விளக்கினார்கள். மேற்கத்தைய நாடுகள் எண்ணிகையையும், லாபத்தையும் மட்டுமே முன்னிருத்துவதையும், இந்திய வர்த்தகம் முக்கியமாக மனித வளத்தையும் அதன் மூலம் எத்துனை குடும்பங்கள் பயன் அடைகிறார்கள் என்பதை பார்ப்பதாகவும் தெரிவித்தார்கள்.

பிற்பகல் காஞ்சிபுரத்தில் பக்தர்களுக்கு தரிசனம் அளித்த பிறகு ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையும் நடைபெற்றது.

**ஏப்ரல்** 5 - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்து அபிஷேகம் மற்றும் விசேஷ பூஜைகள் நடத்தினார்கள். முன்னதாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு விஜயத்தின் போது பூர்ண கும்ப மரியாதைகள் மங்கள வாத்யத்துடன் சமர்ப்பிக்கப்பட்டன.

**ஏப்ரல்** 7 - ஆனதாண்டவபுரத்தில் ஸ்ரீ பஞ்சாபகேச அய்யரின் பூர்வீக வீடு புதுப்பிக்கப்பட்டு அதனை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு அவரது மகன் திரு. பி.வைத்யநாதன் தந்தையின் நூற்றாண்டு (2024) நினைவாக வழங்கினார்கள். இந்த வீட்டில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா சுவாமிகள் தங்கியருந்து நித்ய பூஜைகள், வஸந்த நவராத்திரி, சங்கர ஜெயந்தி, அத்வைத சபை ஆகியவை 1949ம் ஆண்டில் நடைபெற்றுள்ளன.

**ஏப்ரல்** 8 - இன்று ஸ்ரீ காஞ்சி கமகோடி பீடத்தின் 65வது பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ மஹாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆராதனை மஹோத்ஸவம் 65வது பீடாதிபதி இளையாத்தங்குடியில் விரோதி வருஷம் 1891 AD பால்குண மாதம் அமாவாசையன்று சித்தியடைந்தார்கள்.

**ஏப்ரல்** 9 - பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன சபையின் விசேஷ உபந்யாச நிகழ்ச்சியின் 10 ஆண்டுகால பூர்த்தியை முன்னிட்டு அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் குரோதி நாம சம்வத்சரத்தின் யுகாதி தரிசனம் ஸ்ரீ மடத்தில் பக்தர்களுக்கு தந்தருளினார்கள்.

**ஏப்ரல்** 12 - வஸந்த நவராத்திரியின் நான்காவது நாளில் காலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள்.

நவராத்திரி ஒவ்வொரு நாளிலும் ஹோமங்கள் தவிர பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் காலை, மாலை இரு வேளைகளிலும் நவாவர்ண பூஜைகள் நடத்தப்பட்டன. ஸ்ரீமடத்தின் சம்பிரதாயப்படி ஸ்ரீராமநவமியை முன்னிட்டு வேதபாராயணம், ஹோமங்கள் ஆகியவையும் நடத்தப்பட்டன.

**ஏப்ரல் 14 - க்ரோதி சம்வத்சரம் - தமிழ் புத்தாண்டு - விஷுக் கனி -**

தமிழ்ப்புத்தண்டு மற்றும் விஷுவையொட்டி, ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி மஹாஸ்வாமிகள் மற்றும் பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ப்ருந்தாவனங்களில் விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தது. நாதஸ்வர மங்கள இசை, வேதபாராயணம் மற்றும் பஞ்சரத்ன கோஷ்டி கானம் நடைபெற்றது. பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் குழுமியிருந்த திரளான பக்தர்களுக்கு ஆசிகள் வழங்கினார்கள். ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் மற்றும் பிற கோவில்களில் இருந்து பிரசாதம் வழங்கப்பட்டது.

ஏப்ரல் 17 - வஸந்த நவராத்திரி ஸ்ரீ வித்யா ஹோமம் பூர்ணாஹுதி பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் ஸ்ரீ மடம் யாகசாலையில் நடைபெற்றது.

வஸந்த நவராத்திரி ஏப்ரல் 9 முதல் ஆரம்பிக்கப்பட்டது. பஞ்சாங்க பூஜையும், பஞ்சாங்க படனமும் நிகழ்த்தப்பட்டன. நவராத்திரி சங்கல்பமும், யாகசாலை பிரதிஷ்டையும் நடைபெற்றன. ஸ்ரீ வித்யா ஹோமம், ஆவரண பூஜா ஹோமம், ஸ்ரீ ராம சடாக்ஷரி ஹோமம், ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மூல பாராயணம், தமனோத்ஸவம் ஒவ்வொரு நாளும் நடைபெற்றன. வஸந்த நவராத்திரி ஏப்ரல் 9 முதல் 18வரை நடைபெற்றது.

வஸந்த நவராத்திரி முடிவு நாளன்று பூர்ணாஹுதியும், ஸ்ரீராம பட்டாபிஷேகமும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்டன.

யுத்த காண்டத்தில் உள்ள ஸ்ரீ ராம பட்டாபிஷேக சர்க்கம் பாராயணம் செய்யப்பட்டது.

**ஏப்ரல்** 19 - மாலை பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வேடல் கடிகாஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி அர்த்த சாஸ்த்ர பாடசாலை வித்யார்த்திகளுக்கு அருளாசி வழங்கினார்கள். பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் ஸ்ரீ சீதாராம கல்யாணம் நிகழத்தப்படுவது ஒரு தெய்வீக அருள். இத்திருக்கல்யாணம் வைதீக சம்பிரதாயத்துடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி வைகானஸ ஆகம பாடசாலை ஆவடி வித்யார்த்திகளால் நிகழ்த்தப்பட்டது.

**ஏப்ரல்** 20 - ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சங்கரமடம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என ஆசீர்வதித்தார்கள். இவைகள் வேதங்களையும், தர்ம சாஸ்த்ரங்களையும் பயிலவும், நடைமுறைபடுத்தவும், பாரம்பர்யம் , கலைகள், பூஜைகள்

மற்றும் அனுஷ்டானங்களை அறிந்து கொள்ளவும் பயன்படவேண்டும் என்றும், இந்த சங்கரமடங்கள் பக்த கேந்திரங்களாகவும், ஞான கேந்திரங்களாகவும் திகழ வேண்டும் என்றும் அருளினார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் கேரள மாநில செயல்பாடுகளில் காலடியிலுள்ள ஆதிசங்கரர் கீர்த்தி ஸ்தம்பம், கஞ்சிகோடு சிவாலயம், திருவனந்தபுரம் கரமணாவிலுள்ள சங்கரமடம், ராமநாதபுரம் பாடசாலைகள், இறிஞ்சலகுடா, பிற பகுதிகளில் வேதங்களை கற்க ஊக்குவித்தல், வேத பாராயணங்கள் நடத்துதல், காலடியில் சங்கரா பள்ளி மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள அர்ச்சகர்களுக்கு உதவிகள் போன்று பல்வேறு நல திட்டங்கள் அடங்கும்.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் கேரள விஜய யாத்திரையின் போது சடாபுரம் என்னுமிடத்தில் தங்கி ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையும் நடத்தி அனுக்ரஹித்துள்ளார்கள். ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் கேரளாவில் சடாபுரம், கல்பாத்தி, பாலக்காடு ஆகிய இடங்களில் சங்கரமடங்களை ஏற்படுத்தி நமது தர்மம் மற்றும் கலாசாரத்தை பயிலவும், பயிற்சி பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமான பணிகள் பாலக்காடு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கரசார்ய சேவா சமிதியினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அரிய முயற்சியில் ஆஸ்திக பெருமக்கள் பங்குகொண்டு ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் அருளுக்கும் ஸ்ரீஸ்ரீ ஜகத்குருவின் அனுக்ரஹமும் பெற்றுயுய்ய வேண்டுகிறோம்.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# நாம ராமாயணம்

இந்த நாம ராமாயணம் 108 வாக்யங்களைக் கொண்டது. ராமாயணம் முழுவதையும் அழகாகக் கோர்த்து எழுதப்பட்டுள்ளது. துளஸீ தாஸரால் எழுதப்பட்டது. அனைவரும் பாராயணம் செய்வது நலம். குழந்தைகளுக்கு ஓதுவித்தல் அதனினும் நலம். தினம் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப்பட்ட இந்த ஸங்கீர்த்தனத்தை கேட்டல் நலம். ஒவ்வொரு வாக்யத்திற்கும் பின் நான் சரணடைகிறேன் என்று சேர்த்து கொள்ளவும்.

## अयोध्या कान्डम्

अगणितगणगुण भूषित राम्

अवनीतनया कामित राम्

राकाचन्द्र समानन राम्

पित्रुवाक्य आश्रित कानन राम्

प्रिय गुह विनिवेदित पद राम्

तत्क्षालित निज म्रुदुपद राम्



भरद्वाजमुख नन्दक राम्

चित्रकूटाद्रि निकेतन राम्

दशरथ सन्तत चिन्तित राम्

कैकेयीतनयार्दित राम्

विरचित निज पित्रु कर्मक राम्

भरदार्पित निज पादुक राम्

**राम राम जय राजा राम् राम राम जय सीथा राम्**

**அறத்தான் வருவதே இன்பம்;மற் றெல்லாம்**
**புறத்த; புகழும் இல**

*நற்செயல்களால் ஏற்படும் இன்பம்தான் உண்மையான, நிலையான இன்பமாகும். பொருள், பால், பதவி ஆகிய அனைத்தில் இருந்தும் ஏற்படுகின்ற இன்பங்கள் எல்லாம் துன்பமேயாகும். பெரியோர்களால் அவை (பொருள், பால், பதவி) பாராட்டப்படுவதாகவும் இல்லை.*

*(குறள் 39)*

*தர்மத்தைப் பின்பற்றுவோர் இன்புறுகின்றனர்.*

*(மஹாநாராயண உபநிஷத்)*

# அயோத்யா காண்டம்

**அகணித கண குண பூஷித ராம்**

*அளவிட முடியாத குணங்களைக் கொண்ட ராமனை*

**அவனீதனயா காமித ராம்**

*நிலமகள் தந்த பெண்ணால் (சீதை) காதலிக்கப்பட்ட ராமனை*

**ராகாசந்த்ர ஸமானன ராம்**

*பௌர்ணமி நிலவு போல் முகத்தை உடைய ராமனை*

**பித்ரு வாக்ய ஆஸ்ருத கானன ராம்**

*தந்தை சொல் ஏற்று கானகம் சென்ற ராமனை*

**ப்ரிய குஹ வினிவேதித பாத ராம்**

*ப்ரியமான குஹனால் வணங்கப்பட்ட ராமனை*

**தத் க்ஷாலித நிஜ ம்ருதுபத ராம்**

*குஹனால் அலம்பப்பட்ட மென் பாதங்களை உடைய ராமனை*

**பரத்வாஜ முக நந்தக ராம்**

*பரத்வாஜ முனிவரை மகிழ்ச்சியில் வைக்கும் ராமனை*

**சித்ரகூடாத்ரி நிகேதன ராம்**

*சித்ரகூட மலையை வீடாகக் கொண்ட ராமனை*

**தஸரத ஸந்தத சிந்தித ராம்**

*தசரதரை எப்போதும் நினைத்து கொண்டிருக்கும் ராமனை*

**கைகேயீதனயார்தித ராம்**

*பரதனால் மிகவும் வேண்டிக் கொள்ளப்பட்ட ராமனை*

**விரசித நிஜபித்ரு கர்மக ராம்**

*தந்தையின் ஈமக்கடன்களை செய்த ராமனை*

**பரதார்ப்பித நிஜ பாதுக ராம்**

*பரதனுக்குத் தன் பாதுகைகளை தந்த ராமனை சரணடைகிறேன்.*

**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்**

*தீமை செய்யும் பகைவரை அடக்குதலும் நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதலும் நினைத்த அளவில் தவத்தின் வலிமையால் உண்டாகும்*

*(குறள் 264)*

*கேள்வி : காரியசித்தி எதனால் உண்டாகிறது ?*
*பதில் : தவத்தால் உண்டாகிறது.*

*(ப்ரச்னோத்தர ரத்னமாலிகா)*

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 19

# விமுக்தாத்மர்

அத்வைத ஸம்பிரதாயத்திற்குத் தனது மிக ஆழ்ந்த கருத்துக்களோடு கூடிய அரிய நூல்களைப் படைத்தவர் விமுக்தாத்மர். ஸம்க்ஷேப சாரீரகம் எனும் தனது நூலில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் முதல் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீ சர்வக்ஞாத்மர் இவரை 'முக்திகோவித:' என்று புகழ்கிறார். ஸம்க்ஷேப சாரீரகம் நூலுக்கு உரை எழுதியுள்ள ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி, ஸ்ரீ ந்ருஸிம்மாச்ரமி, ஸ்ரீராமதீர்த்தர் ஆகிய மூவரும் இஷ்ட ஸித்தி என்ற நூலை எழுதியுள்ள ஸ்ரீமுக்தாத்மரைப் பெரிதும் புகழ்ந்துள்ளனர். ஸ்ரீ சித்ஸூகாச்சார்யரும் தனது 'தத்வப்ரதீபிகா' எனும் நூலில் இவரைக் குறிப்பிடுகிறார். '**ப்ரமாண வாத நிர்ணயம்**' என்ற ஒரு நூலும் இவர் எழுதியுள்ளார்.

ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி அவர்கள் தனது அத்வைத ஸித்தியின் இறுதிப் பகுதியில் இஷ்ட ஸித்தி, நைஷ்கர்ம்ய ஸித்தி, ப்ரம்ம ஸித்தி என்ற மூன்று ஸித்தி கிரந்தங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். ப்ரம்ம ஸித்தியின் ஆசிரியர் மண்டனமிச்ரர், நைஷ்கர்ம்ய ஸித்தி எழுதியவர் ஸ்ரீ ஸூரேஸ்வராச்சாரியர், ப்ரம்ம ஸித்தி ப்ரம்ம ஞானத்திற்கான ஸாதனங்கள் பற்றி ஆராய்கிறது. ப்ரம்ம ஞானம் தேவையா என விசாரித்து, உண்மையில் இல்லாத பிரபஞ்சம் தோன்றுவது பற்றியும், அதன் இயல்பு பற்றியும் விவரிக்கிறது.

ஸ்ரீ விமுக்தாத்மன் அவித்யை பற்றியும், மாயை பற்றியும் விரிவாக ஆராய்கிறார். க்யாதி அல்லது ப்ராந்தி ஞானம் என்பது இல்லாத ஒன்றை இருப்பது போல் காணும் பொய்யறிவு எனப்படும். இதனை நம் முன்னோர்கள் ஐந்து விதமாகப் பிரித்துள்ளனர். ஆத்மக்யாதி, அஸத்க்யாதி, அக்யாதி, அன்யதாக்யாதி, அநிர்வசனீயக்யாதி என ஐவகைப்படும். இந்த ஐந்தையும் ஸத்க்யாதி மற்றும் அஸ்த்க்யாதி என்ற இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். யோகாசார பௌத்தர்கள் ஆத்மக்யாதியையும், ப்ரபாகரமீமாம்ஸகர்கள் அக்யாதியையும், பாட்ட மதத்தினரும் நையாயிகர்களும் அந்யதாகயாதியையும் ஏற்கின்றனர். மாத்யமிக பௌத்தர்கள் அஸத்கயாதியை ஏற்கின்றனர். அத்வைதிகள் அநிர்வசனீயக்யாதியை ஏற்கின்றனர். அவித்யையினால் கயிற்றில் தோன்றும் பாம்பு ஸத்தாகவுமில்லை அஸத்தாகவுமில்லை; ஸதஸத்

விலக்ஷணமாக, வார்த்தைகளால் எடுத்துச் சொல்லப்பட முடியாததாக இருக்கிறது. இதுவே அநிர்வசனீயக்யாதி, க்யாதே நாஸத், பாதாத், ந ஸத் இதி அந்யோன்ய பக்ஷம் நிராகுர்வத்பிவாதி பிரேவரூப்யஸ்ய அநிர்வசனீயத்வம் ஸ்தாபிதம்.

ப்ராந்தி ஞானம் நிஜமான ஞானத்தால் மறையும். ஞான மாத்ர அபநோத்யத்வாத். ப்ராந்தி ஞானம் எழக் காரணம் அக்ஞானம் அல்லது அவித்யை. அவித்யை என்பதை ஞானமில்லாத நிலை என்று கூறக்கூடாது. இருட்டை வெளிச்சத்திற்கு எதிர்நிலை என்றோ அல்லது மாறுபட்டது என்றோ சொல்லக்கூடாது. ஏனெனில் ஏனெனில் இருட்டு தெரிகிறது. அறியப்படுகிறது. இது ஒரு பாவ வஸ்து. ஒரு இடத்திலிருந்து ஒரு தீபத்தை மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் போது அவ்விடத்திலிருந்த இருட்டு போகிறது என்று எவ்வாறு கூறமுடியும்?

நிஜமான ஞானத்திற்கு முரண்படுவதாலும், மாறுபட்டிருப்பதாலும் அக்ஞானம் என்று பெயர் சூட்டுகிறோம். இஷ்ட ஸித்தி நூலில் அவித்யா நீக்கம் பற்றியும், ஜீவன் முக்த நிலை பற்றியும் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து எழுதுகிறார். முக்திக்கான ஸாதனங்களையும் வரிசைப்படுத்திக் கூறுகிறார்.

ஸ்ரீ விமுக்தாத்மர் பற்றிய வாழ்க்கை விவரங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. கால நிர்ணயம் பற்றிய சர்ச்சைக்குள்ளும் நாம் இறங்க வேண்டிய அவசியமில்லை. த்வைத சித்தாந்தத்தைப் பிரசாரம் செய்த ஸ்ரீ மத்வாச்சாரியார் எனப்படும் ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் ஸ்ரீ விமுக்தாத்மரின் இஷ்ட ஸித்தியை ஸ்ரீ அச்யுதப்ரகாசர் எனப்பட்ட ஸ்ரீ புருஷோத்தம தீர்த்தரிடம் கற்றதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ அனுபூதி ஸ்வரூபாச்சார்யர் இஷ்ட ஸித்திக்கு ஒரு உரை எழுதியுள்ளார். இது இஷ்ட ஸித்தி விவரணம் என வழங்கப்படுகிறது. ஜீவன் முக்தி நிலை பற்றியும் விரிவாக இந்நூலில் விவாதிக்கிறார். 'அஹம் ப்ரம்மாஸ்மி' நான் ப்ரம்மமாகவே இருக்கிறேன் என்பது அனுபவத்தில் ஸித்தித்த பின், இரண்டற்ற அனுபூதியில் திளைக்கும் ஜீவன்முக்தனுக்கு அப்பிறப்பில் உடலெடுக்கக் காரணமாயமைந்த பிராரப்த கர்மா இருக்கும் வரையில் உடலின் ஸம்பந்தம் இருக்கும். அக்ஞான அவஸ்தையில் இருந்தது போல் உடலிலும் அது சார்ந்தவற்றிலும் நான், எனது என்ற பற்று இருக்காது. இவரது விளக்கங்களை ஏற்றுக்கொள்ளாத அறிஞர்கள் கூட இவரை மறுக்கவோ அல்லது வெறுக்கவோ இல்லை என்பது இவரது பெருமைக்கு ஒரு சான்றாகிறது. இவரைத் தொடர்ந்து வருபவர் ஸர்வஞ்ஞாத்மர்.

# சாணக்ய ஸுபாஷிதம்

## சிறப்பு

**ஏகேனாபி ஸுவ்ருக்ஷேண புஷ்பிதேன ஸுகந்தினா**

**வாஸிதம் தத்வனம் ஸர்வம் ஸுபுத்ரேண குலம் யதா ॥**

*ஒரே மரம் ஸுகந்தப் பூக்களைக் கொண்டு வனத்தையே வாஸனையாக்கும். அது போலவே குலம் முழுவதும் ஒரு நல்ல பிள்ளையால் நலம் பெறும்.*

## இதுவே ஸ்வர்கம்

**யஸ்ய புத்ரா வஸீபூதா பார்யா சந்தானுகாமினீ**

**விபவே யச்ச ஸந்துஷ்டச் தஸ்ய ஸ்வர்க இஹைவ ஹி ॥**

*அடங்கிய பிள்ளைகள் அனுஸரிக்கும் மனைவி போதும் என்னும் மன த்ருப்தி எவனுக்கு உள்ளதோ அவனுக்கு இதுவே ஸ்வர்கம்.*

## பூலோக ஸ்வர்கம்

**யதி ராமா யதி ரமா யதி தனயோ வினயதிகுணோபேத:**

**தனயே தனயோத்பத்தி; ஸுரவர நகரே கிமாதிக்யம் ॥**

*அழகிய மனைவி, நிரம்பப் பணம், வினயத்துடன் தனயர்கள், தனயர்கள் மூலம் பேரப் பிள்ளைகள் இதை விட ஸ்வர்கம் பெரியதா?*

## சிறந்த இல்லம்

**ஸானந்தம் ஸதனம் ஸுதாஸ்து ஸுதிய;காந்தா ப்ரியலாபினீ**

**இச்சாபூர்த்திதனம் ஸ்வயோபிதி ரதி; ஸ்வாக்யபரா ஸேவகா;**

**ஆதித்யம் ஸிவபூஜனம் ப்ரதிதினம் மிஷ்டான்னபானம் க்ருஹே**

**ஸாதோ: ஸங்கமுபாஸதே ச ஸததம் தன்யோ க்ருஹஸ்தாஸ்ர்மம் ॥**

*ஆனந்தமான இல்லம் புத்ரர்கள், புத்திசாலிகள், மனைவி, இனியவள் தேவைக்கு ஏற்ற தனம், பிறன் மனை நோக்கா பேராண்மை, நல் உண்டிகள் வீட்டில் ஆணைக்கு அடி பணியும் வேலைக்காரர்கள், ஸாதுக்களின் சேர்க்கை தினம் விருந்தோம்பல் சிவ ஆராதனை இதுவே நல்ல இல் வாழ்க்கை.*

**தீயவைகள்**

**அனப்யாஸோ விஷம் சாஸ்த்ரம் அஜீர்ணே போஜனம் விஷம்**

**தரித்ரஸ்ய விஷம் கோஷ்டீ வ்ருத்தஸ்ய தருணீ விஷம் ॥**

*பயிற்சி இல்லாத ஸாஸ்த்ரம், விஷம், அஜீர்ணத்தில் உணவு விஷம். தரித்ரனுக்கு கோஷ்டி விஷம், முதியோனுக்கு இளம் பெண் விஷம்.*

**எங்கெங்கு**

**தக்ஷகஸ்ய விஷம் தந்தே மக்ஷிகாயா: சிரோ விஷம்**

**வ்ருச்ச்சிகஸ்ய விஷம் புச்சே ஸர்வாங்கே துர்ஜனே விஷம் ॥**

*பாம்புக்கு பல்லில் விடம், தேனிக்கு தலையில் விடம், தேளுக்கு கொடுக்கில் துர்ஜனனுக்கு சர்வாங்கத்திலும் விஷம்.*

**கஷ்டம்**

**கஷ்டன்ச கலு மூர்க்கத்வம் கஷ்டன்ச கலு யௌவனம்**

**கஷ்டாத் கஷ்டதரன்ச பரகேஹே நிவாஸனம் ॥**

*மூர்க்கனாயிருத்தல் கஷ்டம், யௌவனம் அதை விட கஷ்டம், அதனினும் கஷ்டம் இன்னொருவர் வீட்டில் வாஸம் புரிவது.*

**வாஸம் புரிதல்**

**யஸ்மின் தேசே ந ஸம்மானோ ந வ்ருத்திர் ந பாந்தவ:**

**ந ச வித்யாகமோப்யஸ்தி வாஸாஸ்தத்ர ந காரயேத் ॥**

*மதிப்பும், வாழ வழியும் பந்துக்களும், கற்க வழியும் எங்கு இல்லையோ அங்கு இருக்க வேண்டாம்.*

**தனிக: ஸ்ரோத்ரியோ ராஜா நதீ வைத்யஸ்து பஞ்சம:**

**ஏதே யத்ர ந வித்யந்தே ந தத்ர திவஸம் நயேத் ॥**

*தனிகன், அந்தணன், அரசன், நதி, மருத்துவன், இந்த ஐவரும் இல்லாத ஊரில் ஒரு நாள் கூட வஸிக்க வேண்டாம்.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

ஆர். விஸ்வநாதன்



நான் மாணவனாக இருந்த காலத்தில் பெரியவாளின் முகாமில் கழிப்பது வழக்கம். ஒரு தடவை விடுமுறை தினங்கள் கழித்து முகாமுக்குப் போனேன்.

பெரியவா என்னை 'பரீட்சை முடிந்தவுடன் வருவாயே இப்போ ஏன் லேட்? என்றார்கள். நான் பூப்பந்து பேட்மின்டன் போட்டியில் இருந்தேன் அதனால் வர இயலவில்லை என்றேன். பெரியவா இதுவரை பேட்மின்டன் இனிமேல் குட்மின்டன் விளையாடப் போகிறாயா என்று புன் சிரிப்புடன் சொன்னது நினைவுக்கு வருகிறது.

சாதுர்மாஸ்ய காலத்தில் என் தந்தை ஸ்ரீ பெரியவா முகாமில் தங்கி பாஷ்ய பாடம் படிப்பார்கள். ஒரு நாள் மாந்தோப்பில் பாடம் முடிந்து வெயிலில் பெரியவாளோடு வந்து கொண்டிருக்கும் போது என் தந்தை அசந்து போனார்.

ஸ்ரீ பெரியவா உடனிருந்தவர்களிடம் மாவிலைச் சருகுகளைக் கொளுத்தி ஒரு மாங்காயைக் காய்ச்சி பிழிந்து என் தந்தைக்குக் கொடுக்குமாறு சொன்னார்கள். ஒரு முதியவர் இந்த விவரத்தைச் சொன்னார். என் தந்தையும் மயக்கம் நீங்கினார்.

ஸ்ரீ பெரியவா சில சமயம் வேடிக்கை செய்வதைக் கண்டிருக்கிறேன். ஒரு நாள் என்னிடம் இப்பல்லாம் மரியாதைக்குக் காலமில்லை தெரியுமா'' என்றார்கள். பிறகு இப்போ பார்'' என்றார். திரைக்குப் பின்னால் இருந்த சாஸ்த்ரிகளை 'சாஸ்த்ரிகளே' என்று கூப்பிட்டார்கள். அவர் வராததால் அவர் ஊர் பேரைச்சொல்லி சாஸ்த்ரிகளே' என்றார். அவர் வரவில்லை. பிறகு சாஸ்த்ரிகள் பெயரைச் சொல்லி அழைத்தார் வரவில்லை. பின்பு சிரித்துக் கொண்டே 'ஏய் என்றுசொல்லி அவருடைய பெயருடன் சாஸ்த்ரிகள் என்று கூப்பிட்டவுடன் சாஸ்த்ரிகள் எழுந்து வந்தார். ஸ்ரீபெரியவா 'பார்த்தாயா மரியாதைக்குக் காலமில்லை' என்று கூறி சிரித்தார்.

ஒரு சமயம் தேனம்பாக்கத்தில் தர்சனத்திற்கக காத்திருந்தோம். கார்வேட் நகரில் இருந்து வந்த சில பக்தர்கள் நிறைய பழங்களுடன் பணமும் வைத்திருந்து காத்திருந்தனர். பெரியவரின் தொண்டர் ஒருவர் பணம் வைக்க வேண்டாம் என்று கூறிக் கொண்டிருந்தார். அந்த பக்தர்கள் முறை வந்த போது ஒவ்வொரு பழமாக கையில் தடவிப் பார்த்தபோது பணமும் வைத்திருந்ததை அறிந்து 'பணம் வைக்க வேண்டாம்' என்று மீண்டும் சொன்னார். பின்பு பணம் வைக்க வேண்டாம் என்று ஏன் சொல்லுகிறேன் என்று வினவ ஒவ்வொருவரும் அவரவற்குத் தோன்றியதைச் சொன்னார்கள்.

ஸ்ரீபெரியவா 'என் ஒத்தாசைக்குச் சிலர் இருக்கின்றனர். திடீரென்று என் கூட புறப்பட நேரிடும். ஒரு பெட்டி கூட கிடையாது. பணம் இருந்தால் அதை வைத்துக் கொள்ள முடியாது. எப்படியோ பணம் காணாமல் போனால் நிறைய ஸந்தேஹம் வரும். திருட்டு பயம் அனைவருக்கும் வரும். அதனால் பணம் வந்து விட்டது எனின் வீண் ஸந்தேஹமும் பயமும் வரும் என்று விளக்கினார்கள்.

(தொடரும்)

★★★★★★★★★★★★★★

# ஆழ்வார்கள் சரித்திரம்

## தொண்டரடிப்பொடி

*நம்மாழ்வார் 4*

*வைஷ்ணவ இலக்கியத்தில் வைஷ்ணவத்தின் ஸித்தாந்தத்தை தெளிவாக கூறப்பட்ட பாசுரங்கள் நம்மாழ்வாருடையவை தான். வெறும் ஸ்தோத்ரம் மட்டுமல்லாமல் தத்வத்தை கூறியவை. ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்ததிற்கு அடிப்படை இவரது பாடல்களே. ஞானச் சுடராய் விளங்கியவர். அவர் வைகாசி மாதம் விசாக நக்ஷத்ரத்தில் வேளாளர் குலத்தில் ஜனித்தவர். பிறந்த ஊர் திருக்குருகூர்.*

*எம்பெருமானே நம்மாழ்வாராகப் பிறந்தவர் என்றும் ஓர் ஐதிஹம். பிராட்டியும் மகிழ மாலையாக வந்ததாகவும் ஆழ்வாரும் அதை எப்போதும் அணிந்ததால் வகுளாபரணர் என்னும் திரு நாமம் ஏற்பட்டது. பெற்றோர் இட்டபெயர் மாறன் என்பதாகும்.*

*பிறந்தது முதல் பேசாமலேயே இருந்தவர். பெற்றோர்கள் கவலை கொண்டனர். ஆழ்வாதிருனகரி க்ஷேத்ரத்தில் இருந்த பெருமாளை வேண்டினர். எம்பெருமானை தாங்கும் ஆதிசேஷப்பெருமான் அங்கே புளிய மரமாய் இருக்க, ஒரு நாள் ஆழ்வார் தாயின் மடியிலிருந்து இறங்கி அந்த புளிய மரத்தின் பொந்தில் அமர்ந்தார். பதினாறு ஆண்டுகள் பேசாமல் அங்கேயே இருந்தார் ஆழ்வார். எம்பெருமான் சேனை முதலியாரை அவரிடம் அனுப்பி அவருக்கு மந்த்ரங்கள் சாஸ்த்ரங்கள் ஆகியவற்றை உபதேசித்தார். இப்படி சாஸ்த்ரங்களை கற்றுணர்ந்தார் ஆழ்வார்.*

*அச்சமயம் ஆழ்வார்களுள் ஒருவரான மதுரகவி ஆழ்வார் அயோத்தியில் இருந்தார். அப்போது தெந்திசையில் பேரொளி ஒன்று தோன்றியதைக் கண்டு ஆழ்வார் இருக்குமிடம் வந்தார். மௌனமாக இருந்த ஆழ்வாரைக் கூப்பிட்டும் தட்டியும் பார்த்தார்.*

*ஆழ்வார் கண் திறக்கவில்லை. ஒரு கல்லை அவர்முன் போட ஆழ்வார் கண்விழித்தார். மதுரகவி ஆழ்வார் 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்' என்று வினவ 'நம்மாழ்வார் அத்தைதின்று அங்கே கிடக்கும்' என்று வாய் திறந்து பேசினார். அவரது பதிலைக் கேட்டு வியந்த மதுரகவி ஆழ்வார் அவருடைய சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டினார். நாம்மாழ்வார் பாசுரங்களை சுவடியில் எழுதி வைத்து உலகிற்கு அருளினார்.*

***'கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்***
***எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே'***

*என்னும் பாசுரத்தைச் சங்கப் பலகையில் வைக்க மற்ற நூல்கள் கீழே விழுந்துவிட்டன என்பது சரித்ரம். சக்ரவர்த்தி கம்பர் எம்பெருமான் ஆணையை ஏற்று சடகோபர் அந்தாதி எழுதியதும் சரித்ரம். எம்பெருமான் அருளால் நம்மாழ்வார் திருமாலின் பாதுகைகளாய் எழுந்தருளினார். அவை 'சடாரி' என்று அழைக்கப்படுகிறது. மக்களுக்கும் எம்பெருமானுக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்பது போல் சடாரி அவர்கள் தலையில் வைக்கப்படுகிறது.*

*முப்பத்தைந்து வயதே வாழ்ந்தவர் நம்மாழ்வார். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்று வேதங்களின் சாரத்தை அவர் எழுதிய நூல்களில் அத்புதமாய் அருளிச்செய்துள்ளார்.அவரது திருவடிகளை எண்ணி உய்வோம்.*

***'உயர்வு அற உயர் நலம் உடையவன் எவன் அவன்***
***மயர்வு அற மதி நலம் அருளினன் எவன் அவன்***
***அயர்வு அறும் அமரர்கள் அதிபதி எவன்/ அவன்***
***துயர் அறு சுடர் அடி தொழுதெழு என் மனனே.'***

*பொருள் : உயர்வுகளுக்கு மேம்பட்ட உயர்வாளன் எவனோ அவனே மதி மயக்கத்தை நீக்கினான், நலம் அருளினான். அமரர்களுக்கு அதிபதி அவன். நெஞ்சமே! துயர் போக்கும் அவன் ஒளித் திருவடி தொழுது மேன்மை பெறுக.*

***அவரவர் தமதமது அஏய்வறி வகை வகை***
***அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்***
***அவரவர் இரையவர் குரைவிலர் இறையவர்***
***அவரவர் விதிவழி அடைய நின்றனரே.***

*பொருள் : பற்பல மக்கள் தங்களுடைய குணங்களுக்கு ஏற்ப அவர்கள் அறிந்த நெறிகளில் தங்கள் கடவுளை வழிபடுவர். அந்த கடவுள்களும் அவர்களுக்குப் பலன் அளிப்பர். அவர்களுடைய கடவுள்களில் உள்ளே உறைவது (அந்தர்யாமியாய்) இருப்பது இறைவன் ஒருவனே.*

***ஒப்பிடுக பகவத் கீதை ராஜ வித்யா ராஜ குஹய்***

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ஸத்யவாதினே வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ஜீவஸ்து வ்ருக்ஷவத் நித்யம் ஜாயதே ம்ரியதே ததா**

**தஸ்மாத் ஸத்யம் வதேத் தீமான் இதி வேதாந்தபாஸ்கர: ।।**

ஜீவன் மரத்தைப் போல் பிறக்கிறான், இறக்கவும் செய்கிறான். இவன் நிரந்தரமானவன் அல்லன். அதனால் விவேகியானவன் எப்பொழுதும் உண்மையையே கூறவேண்டும்.

## 27. மனிதப் பிறவி நிரந்தரமானது இல்லை

**ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே, ஸஸ்யமிவ ஆஜாயதே புன : ।**

**காடகோபநிஷத் 1-1-6**

*மனிதன் புல் பூண்டுகளைப்போல், தோன்றுகிறான், அழிகிறான். மீண்டும் பிறக்கிறான்.*

மனிதன் தன்னை நிரந்தரமானவன் என்று நினைத்து பாவச் செயல்களைச் செய்கிறான். தன் சுயநலத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்வான். அவன் தாய், தந்தை, குரு மற்றும் கடவுளைக் கூட நிந்தனை செய்வான்.

இதற்கு என்ன காரணம் ? தன்னை நிரந்தரமானவன் என்றும் தனக்கு முதுமையோ, இறப்போ வராது நான் என்றும் சிரஞ்ஜீவியாக வாழ்வேன் என்ற எண்ணமும் தான் இதற்குக் காரணம். தன் கண்முன்னாலேயே பிறப்பையும் இறப்பையும் கண்டும் தான் மட்டும் நிரந்தரமாக இருக்க முடியும் என்கிறது தவறான அறிவு அல்லவா !

உடல் என்பது அனித்யமானது, பிறந்த மனிதன் சிறிது காலம் வாழ்ந்து ஒரு நாள் மறையவே வேண்டும். பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பு என்று ஒன்று இருந்தாகவே வேண்டும். **'ஜாதஸ்ய மரணம் த்ருவம்'**. பிறந்தவன் மரணம் அடைந்தே ஆகவேண்டும். ஆகையால் மனிதன் கருமியாகவும், சுயநலமிக்கவனாகியும், வஞ்சகனாகவும் மாறிவிடக் கூடாது. மனிதப்பிறவி நிரந்தரமல்ல.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர். **வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## ஸ்வர்காரோஹண பர்வம்

***ஜய விஜயா***

*ஸ்வர்கத்தை அடைந்தவுடன் யுதிஷ்டிரர் ' எங்கே யுத்ததில் மடிந்த வீரர்கள்?*

*ஹாத்மாக்கள் எங்கே ? அர்ஜுனனால் கொல்லப்பட்ட என் மூத்த சகோதரன் கர்ணன் எங்கே? இங்கே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எங்குள்ளார்களோ அங்கே என்னை அழைத்துச் செல்லுங்கள்' என்றார்.*

*'உமக்கு அவர்களைக் காண மிகுந்த ஆவல் இருப்பின் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்லுங்கள்' என்று தேவ தூதர்கள் சொல்லி அவரை அவர்கள் இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றனர்.*

*யுதிஷ்டிரர் அவர்களுடன் அசுபமாயிருப்பதும் பாபிகள் இருப்பதுமான இடத்திற்குச் சென்றார்.*



*அங்கே நரகத்தின் தண்டனைகளை கண்டார்.*

*யுதிஷ்டிரர் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?*

*தேவதூதர்கள் இவ்வளவுதான் ''*

*அவ்விடத்தில் தர்மத்தின் உறைவிடமே தர்மபுத்ரரே! சற்று*

நில்லுங்கள். நீங்கள் இருப்பதால் வேதனை தெரியவில்லை' என்னும் ஓலம் கேட்டது.

அதைக் கேட்ட தர்மர் அங்கேயே நின்று என்ன வேதனை! நீங்கள் எல்லாம் யார்? என்றார்.

ஐயோ ! கர்ணன் நான் பீமன் நான் என்று குரல்கள் எழுந்தன.

யுதிஷ்டிரர் இந்த மகாத்மாக்கள் வீரர்கள் செய்த பாவமென்ன? ஏன் வேதனையை அனுபவிக்கின்றனர்?' என்று கூறி தர்ம தேவதையையும், தேவர்களையும் இகழ்ந்தார். தேவதூதர்களைப் பார்த்துச் சொன்னார்.

யுதிஷ்டிரர் 'தேவர்களுக்குச் சொல்லுங்கள். நான் ஸ்வர்க்கம் வர மாட்டேன். எவ்விடத்தில் என் பந்துக்களுக்கு சுகம் கிடைக்குமோ அந்த இந்த நரகத்திலேயே நான் இருக்க விரும்புகிறேன். அதனால் அவர்களுக்கு சுகம் வருவதால் இதுவே எனக்கு ஸ்வர்க்கம்.

யுதிஷ்டிரர் அங்கு இருந்த காலத்தில் நரக இந்தகாரம் மறைந்தது.வேதனைகள் மறைந்தன. மந்த மாருதம் வீசியது. அவ்விடத்திற்கு தேவர்கள் ஆவிர்பவித்தனர்.

இந்த்ரன் யுதிஷ்டிரரே நீர் கோபம் கொள்ள வேண்டாம். என் வார்த்தையைக் கேளுங்கள். நரகத்தை அனைத்து அரசர்களும் பார்க்க வேண்டும். ஒரு வ்யாஜத்தால் த்ரோணரை வீழ்த்தினீர். அதற்கு இந்த நரக வ்யாஜத்தைப் பார்க்கிறீர்.

அனைவரும் ஸ்வர்கம் சென்று விட்டனர் இதோ மூவுலகையும் புனிதமாக்கும் கங்கை இதில் ஸ்னானம் செய்யவும். இந்த பூவுடல் மறையும்.

தர்ம தேவதை என் இனிய புத்ரனே! அரசே! நான் வைத்த மூன்று பரீக்ஷைகளிலும் நீ தேறிவிட்டாய். தைவத வனத்தில் கேள்விகள், ஸ்வர்கம் போகும் போது நாய் உருவில், இரண்டாவது, இதோ இப்போது உறவினர்கள் இருக்குமிடமே ஸ்வர்கம் என்று கூறியது மூன்றாவது. அவர்கள் யாரும் நரகத்திற்கு ஏற்றவர்கள் அல்லர்.அவர்களை ஸ்வர்கத்தில் பார்.

அதன் பின் தர்மர் கங்கையில் நீராடி தன் பூத உடலை நீத்து ஸ்வர்கம் சென்றார். திவ்ய உடலுடன் அங்கு அர்ஜுனனுடன் க்ருஷ்ணரையும், கர்ணனையும், பீமனையும், வீரர்களையும் நகுலனையும், ஸஹாதேவனையும், த்ரௌபதியையும் கண்டார். பீஷ்மர் வஸுக்களில் ஒருவராகவும், த்ரோணர் ப்ருஹஸ்பதியில் ஒன்றியும், த்ருதராஷ்டிரன்

குபேரனுடனும், பாண்டு இரண்டு மனைவியருடன் இந்த்ர லோகத்தில் இருப்பவராகவும் கர்ணன், ஸூர்யனோடும் விதுரர் தர்ம தேவதையுடனும் வாஸுதேவர் நாராயணனாகவும் இருப்பதைக் கண்டார்.

முடிவுரை

பாண்டவர்கள் , கௌரவர்களின் சரித்ரமும் வ்யாஸரால் சொல்லப்பட்டதும், பாண்டவர்களின் கீர்த்தியைச் சொல்வதும், வாஸுதேவ க்ருஷ்ணரின் லீலைகளைச் சொல்வதுமான மகாபாரதம் முடிகிறது. இதை ஓதுபவன் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

அறம், பொருள், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களும் இதில் உள்ளன. இதில் இருப்பது வேறு நூலில் இருக்கும். இதில் இல்லாதது எங்குமில்லை. 'ஜயம்' என்னும் இந்த நூல் படிக்கப்படும் இடத்தில் ஸ்ரீயும் கீர்த்தியும் கல்வியும் ஸந்தோஷமும் இருக்கும்.

**பாரத ஸாவித்ரீ**

இது ஐந்து ஸ்லோகங்கள் கொண்டது . வ்யாஸ பகவானால் அனுக்ரஹிக்கப்பட்டது. இதை தினமும் பாராயணம் செய்வது, அதன்படி நடப்பது நன்மை பயக்கும்

**மாதாபித்ரு ஸஹஸ்ராணி புத்ரதார சதானி ச**
**ஸம்சாரேஷ்வனுபூதானி யாந்தி யாஸ்யந்தி சாபரே ॥ 1**

ஆயிரக்கணக்கான அன்னைகளும், தந்தைகளும், புத்ரர்களும், மனைவிகளும் இந்த ஸம்ஸாரச் சக்ரத்தில் வருகின்றனர், வருவார்கள்.

**ஹர்ஷஸ்தான ஸஹஸ்ரானி பயஸ்தான ஸஹஸ்ராணி ச**
**திவஸே திவஸே மூடமாவிஸந்தி ந பண்டிதம் ॥ 2**

மூடனுக்கு மகிழ்ச்சிக்கு ஆயிரம் இடங்களும் பயத்திற்கு நூறு இடங்களும் புகும். பண்டிதனிடத்தில் புகா.

**ஊர்த்வபாஹுர்விரௌம்யேஷ ந ச கச்சித் ஸ்ருணோதி மே**
**தர்மாதரத்தச்ச காமச்ச ஸ கிமர்த்தம் ந சேவ்யதே ॥ 3**

தர்மத்திலிருந்துதான் அர்த்தமும், காமமும் என்று இரு கைகளையும் தூக்கி கதறுகிறேன். ஒருவரும் கேட்பதில்லையே.

**ந ஜாது காமான் ந பயான்ன லோபாத் தர்மம் த்யஜேத்**
**ஜீவிதஸ்யாபி ஹேதோ:**
**நித்யோ தர்ம: ஸுகதுக்கே த்வனித்யே ஜீவோ நித்யோ**
**ஹேதுரஸ்ய த்வனித்ய: ॥ 4**

*காமத்தாலோ, அச்சத்தாலோ, லோபத்தாலோ தர்மத்தை விடலாகாது. தர்மம்தான் நித்யமானது. இன்பம், துன்பம் அழிந்து போவது. ஜீவன் என்றுமுள்ளவன். அவன் தோன்றக் காரணம் அனித்யம்.*

**இமாம் பாரதஸாவித்ரீம் ப்ராத்ருத்தாய ய; படேத்**
**ஸ பாரதபலம் ப்ராப்ய பரம் ப்ரஹ்மம் அதிகச்சதி ॥ 5**

*இந்த பாரத ஸாவித்ரியை எவன் காலையில் எழுந்து படிப்பானோ அவன் பாரதம் படித்த பலனை அடைந்து பரப்ரம்மத்தை அடைவான்.*

## மகா பெரியவா பொன்மொழிகள்

1. தானத்தில் சிறந்தது அன்னதானம். இதன் மூலம் மட்டுமே ஒரு மனிதனைத் திருப்திப்படுத்த முடியும்.
2. உடம்பின் அழுக்கு நீராடினால் நீங்கி விடும். உள்ளத்திலுள்ள அழுக்கை தியானப் பயிற்சியால் போக்க முடியும்.
3. எதிர்பார்ப்புடன் பக்தியில் ஈடுபட்டால் அது வியாபாரமாகி விடும்.
4. நல்ல விஷயங்களை நாளை என்று காலம் தாழ்த்தக் கூடாது. அவற்றைச் செய்து முடிக்க இன்றே நல்ல நாள்.
5. நம் தாயாகிய பூமி, நமது விருப்பங்கள் அனைத்தையும் நமக்கு அளிக்க தயாராக இருக்கிறாள். அவளைப் பாதுகாத்து போற்றுங்கள்
6. நம் தந்தையாகிய கடவுள் சகலரிடமும் கருணை காட்டுகிறார். ஆகவே, அவரை வணங்குங்கள்.
7. பெண்கள் சமையலுக்காக வீட்டில் அரிசி எடுக்கும் போது, ஒரு கைப்பிடியை ஏழைகளுக்கு தர்மம் செய்ய எடுத்து வைக்க வேண்டும்.

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 4. சாந்தி மந்திரங்கள் உலக அமைதிக்கு வழி

'வேத'ங்கள் ஒரு ஞானப்பெட்டகம்; 'வேதங்கள்' ஞானக் கடல்; வேதங்கள் பகவானுடைய நேரான உபதேசங்கள். ஜாதி, வர்ணம், ஆசிரமம், மதம், மார்க்கம்-முதலிய எந்த பேதமுமில்லாமல் எல்லா மனிதர்களுக்கும் மேன்மை, சாந்தி, ஆனந்தங்களை அளிக்கும் 'அபௌருஷேய' (மனித முயற்சியால் உருவாக்கப்படாத) நூல்கள் தான் வேதங்கள்.

வேதங்களில் நூற்றுக் கணக்கில் சாந்தி மந்திரங்கள் உள்ளன. இவை யாவும் உலக அமைதியையே வலியுறுத்துகின்றன. இவற்றில் ஒன்றைப் பார்ப்போமாக:

**ஸஹ நாவவது । ஸஹ நௌ புனக்து । ஸஹவீர்யம் கரவாவஹை ! தேஜஸ்வி நாவதீதமஸ்து । மா வித்விஷாவஹை । ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।**

இது யஜுர்வேதத்தின் பிரசித்தமான சாந்திமந்திரம். இதனுடைய பொருள் மிக உயர்வானது. ''நாம் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருப்போமாக. நாம் சேர்ந்தே சுகதுக்கங்களை சமமாகப் பங்கு கொள்வோமாக. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டை பெருமையுள்ளதாக, உருவாக்குவோமாக. நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் நல்லதாகச் செய்வோம். நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமல் இருப்போம். யாரையும் வெறுக்காமல் எல்லோரையும் அன்புடன் பார்ப்போமாக!''

இந்த சாந்தி மந்திரம் உலக அமைதியைக் கூறும் மிக உயர்ந்த மந்திரம் அல்லவா ? இப்படிப் பட்ட சாந்தி மந்திரங்களின் கடலே வேதங்கள் ஆகும். இத்தகைய வேதங்களை நாம் காப்பாற்ற வேண்டாமா ? இந்த வேத உபதேசங்களின் சிந்தனை மூலம் விருப்பு, வெறுப்புகளை நீக்கிக் கொள்வோம்.

உலக அமைதிக்காக வேதங்கள் சொல்லும் மார்க்கத்தில் நாம் நடப்போமாக. நாம் எல்லோரும் ஒரே இறைவனின் மக்கள் அல்லவா ? ஒரே சர்க்கரையில் தயாரிக்கப்படும் வேறு வேறு இனிப்புகளும் சர்க்கரையே ஆகுமல்லவா ? நம் ஆசார, விசாரங்கள், உடைகள், பழக்க வழக்கங்கள், மொழிகள் முதலானவை வேறு வேறாக இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே மனித இனம் தான். அனைவரும் சகோதரர்களே. இதுவே சாந்தி மந்திரங்களின் உபதேசமாகும்.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாரயணம் செய்வோம்.

**गिरां दूरौ चोरौ जडिमतिमिराणां कृतजग–**
**त्परित्राणौ शोणौ मुनिहृदयलीलैकनिपुणौ।**
**नखैः स्मेरौ सारौ निगमवचसां खण्डितभव–**
**ग्रहोन्मादौ पादौ मम मनसि कामाक्षि कलये ।।४४।।**

கிராம் தூரௌ சோரௌ ஜடிம - திமிராணும் க்ருத-ஜகத்-
பரித்ராணௌ ஶோணௌ முனிஹ்ருதயலீலைகநிபுணௌ ।
நகை: ஸ்மேரௌ ஸாரௌ நிகம வசஸாம் கண்டித-
பவக்ரஹோந்மாதௌ பாதௌ மம மனஸி காமாக்ஷி கலயே।।44।।

பாதாரவிந்தசதகம் 44

வாக்குகளுக்கு எட்டாதவை, அறியாமை இருளை அபகரிப்பவை, ஜகத்தை காப்பவை சென்னிறமுடையவை, முனிவர்களின் இதயத்தைக் களிப்பிப்பதில் நிபுணமுடையவை, நகங்களின் ஒளிகளால் புன்முறுவல் செய்பவை, வேத வசனங்களின் ஸாரமானவை, ஸம்ஸாரமாகியய் பிசாசின் செருக்கை அடக்குபவையான உம்முடைய திருவடிகளை த்யானிக்கிறேன்.

जपालक्ष्मीशोणो जननि परमज्ञाननलिनी–
विकासव्यासङ्गो विफलितजगज्जाड्यगरिमा।
मन: पूर्वाद्रिम् मे तिलकयतु कामाक्षि तरसा
तमस्काण्डद्रोही तव चरणपाथोजरमण:।।१७।।

ஜபாலக்ஷ்மீஶோணோ ஜநநி பரம-ஜ்ஞாந-நலிநீ
விகாஸ-வ்யாஸங்கோ விபலித-ஜகஜ்-ஜாட்ய-கரிமா
மந:-பூர்வாத்ரிம் மே திலகயது காமாக்ஷி தரஸா
தமஸ்-காண்ட-த்ரோஹீ தவசரண-பாதோஜ-ரமண:।।17।।

பாதாரவிந்தசதகம் 44

காமாக்ஷியே! உனது சரணம் என்னும் தாமரையின் காதலனான சூர்யன் (ஜபாதேவி தன்னுடன் இருப்பதால்) செம்பரத்தம் பூவிலுள்ள செவ்வொளி போன்ற சிவப்பு நிறமுடையவனாய் பரம ஞானமாகிய தாமரையை மலரச்செய்வதில் கருத்துடையவனாய் லோக ஜடத்தன்மையின் கனத்தைப் பயனற்றதாக்குகின்றவனாய் என் மனதாகிய உதய பர்வதத்தை அடைந்து அங்கேயே திலகமாய் விளங்கட்டும்.

(தொடரும்)

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு**

*இவ்வுலகத்தில் அறத்தால் வரும் இன்பத்தை அனுபவிப்பதனால் பெறுகின்ற சிறப்பானது. அன்பினை உடையவராகி அறத்தோடு பொருந்தியதன் பயனே ஆகும் என்று கூறுவார்கள்.*

*(குறள் 75)*

*உயிர்கள் அனைத்திடமும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் உடையவன் சிறந்த பக்தன்.*

*(ஸ்ரீமத் பகவத்கீதை : 12 - 13)*